
# கடல் விரல்கள்



1

வள்ளியூர் பஸ் நிலையத்தில் அந்த நான்கு பெண்களும் இறங்கினர். பெட்டிக் கடைகள் சூழ, வாகனங்கள் மனிதர்கள் என்று நெரிபட்ட சிற்றூரைப் பெண்களின் பார்வை ஆர்வமாய் அலச, பஸ் நிலையமும் அவர் களைப் பதிலுக்கு வெகு ஆவலுடன் கவனித்தது.

அந்த நால்வரும் பட்டணத்தின் கல்லூரி மாணவிகள் என்பது அவர்கள் நெற்றியில் எழுதினாற் போல் ஒரு தெளிவு.

சூடிதார் உடை சிற்றூர், கிராமங்களையும் எட்டி யிருந்தாலும், அவர்களின் உடை தைக்கப்பட்டிருந்த வித மும், அதை அவர்கள் அணிந்திருந்த ஒயிலும் வித்தியாச மாய் இருந்தது.

வெயில் பட்டும் பழுதாகாமல் பராமரிக்கப்பட்ட அவர்கள் 'பளீர்' முகங்களும் உதட்டின் மர நிறச் சாயமும் அசத்தின.

மீனா தன் அப்பா அனுப்பியிருக்கக்கூடிய ஜீப்பிற்காய்ச் சுற்றிலும் பார்த்தாள். இங்கிருந்து முக்கால் மணி நேரப் பயணத்தில் அவளது ஊருக்குப் போய்ச் சேர்ந்து விடலாம்.

'இதப் பாருங்க, எங்க ஊர் விசேஷமானது - உங்க ஈரோடு, சேலம், ராஜபாளையம் மாதிரிச் சாதாரணமான தில்லை.'

இப்படி அவ்வப்போது மீனா அலட்ட, மற்ற மூவரும் 'ஹோ' என்று இரைந்ததுண்டு.

'என்னடி உங்க பக்கத்துல விசேஷம்? மின்சாரச் சப்ளை கூட வந்தது பத்து வருஷமாத்தான்னு சொல்லி யிருக்கியே.'

'எஸ்டேட் மாதிரித் தனித்தனி ஊருங்க உண்டு. அவை களுக்கு மின் இணைப்புத் தருவது லேசில்லையே - சோலைமலை ஒரு குட்டி கிராமம். அங்கும் இங்குமாய்ச் சில வீடுங்கதான். ஆனால் அந்தப் பசுமை, அமைதி எல்லாம் 'யுனீக்.' எது மாதிரியுமல்லாத நூதனம் - ஒரு வாரமாவது தங்கி அனுபவிச்சாத்தான் உங்களுக்குப் புரியும்.'

'ரைட்.'

ஒத்துக் கொண்டனர் தோழிகள்.

கல்லூரியின் முதல் ஆண்டில் இரண்டு நாள் விடு முறையின் போதும் தங்கள் தங்கள் ஊர்களுக்கு ஆலாய்ப் பறந்து போனவர்கள், மறு வருடம் தோழியின் ஊர் களுக்குச் சேர்ந்து போய்க் கலக்கினார்கள். சிநேகிதிகளின் குடும்பத்தைப் பார்க்க, பழக அது புதுவித அனுபவம்தான்.

தோழமையும் இறுகியது.

அக்டோபர் மாதம் கிடைத்த ஒரு வார விடுமுறையைக் கழிக்க, பெரும் எதிர்பார்ப்புடன் மீனாவின் வீட்டிற்குக் கிளம்பியிருந்தார்கள்.

'அப்பா ஜீப் அனுப்ப மறந்துட்டாங்களா? ஆனா அம்மா ஞாபகமாய் அனுப்பியிருக்கணுமே!' தனக்குள் ளாய் முணுமுணுத்தபடி பஸ் நிலையத்தைச் சுற்றிய மீனாவைத் தொடர்ந்தாள் தீபா.

''ஜீப் நம்பர் 1015 - நீயும் தேடு தீபு.''



''ம்ம் - கூட்டுத் தொகை ஏழு. உங்கப்பாவுக்கு ஏழுதான் லக்கி நம்பரா?''

''ஏய்... அப்பாவைப் பற்றிதான் சொல்லியிருக்கேனே - அவரு சயின்டிஸ்ட். நாள் கோளிலெல்லாம் நம்பிக்கை இல்லாதவர் - அதாவது அவை மனிதனை ஆட்டி உலுக்கும் என்பதை நம்பாதவர். எங்களின் பயணம், ஷாப்பிங் எல்லாம் செவ்வாய்க் கிழமைகள்லதான் - அன்னைக்குத்தான் கூட்டமில்லாமல் சௌகர்யமாய் இருக்கும்பார்...''

''ஆ... அதோ... 1015 நம்பர் ப்ளேட்.''

இருவரின் முகங்களும் மலர்ந்தன.

''ரைட். போய் மற்ற ரெண்டு பேரையும் கூட்டிட்டு வர்ரயா?''

''ம்ம்.''

லாவண்யா ஒரு தெனாவெட்டுடன் தொடர்ந்து பஸ் நிலையத்தின் மக்கள் கூட்டத்தை, அவர்கள் முறைப் பையும் லட்சியம் பண்ணாமல், நோட்டமிட்டுக் கொண் டிருந்தாள். அவள் ஈரோட்டுப் பெண். பேச்சில் கொங்கு தமிழ் கமகமக்கும். தன்னருகே அடுக்கப்பட்டிருந்த பெட்டி, பைகளில் கைக்கொன்றாய் எடுத்த தீபா கேட்டாள் -

''நித்யா எங்கே?''

''வழக்கம் போலப் பத்திரிகை வாங்கப் போயிட்டா.''

''விஜய் படம் போட்ட எல்லாப் பத்திரிகையும் அள்ளிக் கறதுக்கா?''

''பின்னே? அந்தப் பொட்டிக்கடையில விஜய் ப்ளோ-அப் தொங்க விட்டிருந்தான் - நூறு ரூபா தாரேன், அதைத் தந்திடுப்பான்னு கடைக்காரனைக் கெஞ்சிட்டிருக்கா.''

''கஷ்டம்.''

ஆனால் இருவரும் கஷ்டப்படாமல் சிரித்தனர். நித்யா வும் வாயெல்லாம் சிரிப்பாய்ப் பத்திரிகைகள், சுருட்டிய போஸ்டருமாய் வர, மூன்று பெண்களும் கிளம்பினர்.

சாலை மோசம்தான்.

ஆனாலும் சுற்றிலுமிருந்த காட்சி மகா ரம்யம். கண் களைக் குளிர்விக்கவே அமைந்தாற்போல, இருபுறமும் வயல்வெளிகள். அவற்றின் விளிம்பில் காவல் நின்றன பருத்த தென்னைகள்.

ஓடையின் சலசலப்பும், கால் மாற்றி மாற்றி நின்ற கொக்குகளும், அது வெற்று ஓவியம் அல்ல என்றன.

பெண்கள் பேசிச் சிரித்தபடி வந்ததில், பயணம் சுருங்கி விட்டது. வளைந்த பாதையில் நெளிந்து மேலேறிய ஜீப் கடைசியாய் நின்ற இடத்தைப் பார்த்த மூவரும் 'வாவ்' என்றனர், தன்னிச்சையாய்.

''அட்டகாசமான வீடு, மீனு... நூறு வயசிருக்குமா இதுக்கு?''

''ஏறக்குறைய... நான் இதிலே நாலாம் தலைமுறை.''

பெட்டிகள் இறக்கப்பட்டன.

''வாங்கம்மா! நல்லாயிருக்கீகளா?''

''சௌக்கியம் ராஜு. சாமான்கள் மாடிக்குப் போயிரணும்.''

''ஆகட்டுங்க...''

''அம்மா எங்கே?''

''சமையல்ல இருக்காக - இடியாப்பம் பிழிஞ்சுட்டு...''

''குட் - எங்களுக்கெல்லாம் செமப் பசி.''

''வாங்க!'' என்றபடி, மீனா உள்ளே விரைய, அப்பெரிய பழைய வீட்டை ஆச்சரியமாய்ப் பார்த்தபடி தொடர்ந் தனர் தோழிகள் மூவரும்.



''மீனாச் செல்லம் - வாடீ.''

மகளைக் கட்டி முத்தமிட்ட பெண்மணியை ஆர்வ மாய்ப் பார்த்தனர்.

மாநிறத்தில் முதிர்ந்த அழகுடனிருந்தாள்.

மூவருக்கும் ஒரு வாரம் வரை மீனா வீட்டில் தங்குவது பற்றித் தயக்கம் இருந்ததுதான் - ஆனால் அவளோ அடித்துச் சொன்னாள் - 'உங்களுக்கு எங்கம்மாவைப் பற்றித் தெரியாது - ஸ்வீட் அம்மா - ஒரு மாசம் நீங்க தங்கினாலும் தினத்துக்கு ஒரு விதமாய்ச் சமைச்சுப் போடுவாங்க.''

''உன்னைப் பார்க்க அவங்க சென்னைக்கு வந்த தில்லையே... அதான்...''

''என்னைக் காலெஜில் சேர்க்கும் போது வந்தாங்க. அப்போ நமக்கு ஒருத்தரை ஒருத்தர் தெரியாதே! அப்பா சயன்டிஸ்ட். அவரது வேலையத் தவிர வேறேதும் தெரி யாது - அம்மா கூட இல்லாட்டிச் சாப்பிடவும் மறந் திடுவார். அதான் அம்மா வர்ரதில்லை...''

இது போக மகள் கேட்டுக் கொண்டபடி, மீனாவின் தாய் மகளின் சிநேகிதிகளுக்குக் கடிதம் மூலம் பிரியமாய் அழைப்பு விடுக்க, மூவரும் கிளம்பி விட்டனர்.

''வாங்கம்மா - நித்யா, லாவண்யா, தீபா.''

ஒவ்வொருவர் பெயரையும் சரியாய்க் குறிப்பிட்டு அவர வர் வகிட்டில் முத்தம் இட மகிழ்ச்சியாய் முழித்தனர்.

''மீனாதான் உங்க ஃபோட்டோவெல்லாம் காண்பிப் பாளே - உங்க வீடுகளில் கிடைத்த பாசம், உபசரணை பற்றி யெல்லாம் கதையாய்ச் சொல்வாளே... மாடி ரூம்களில் வெந்நீர் தயாராய் இருக்குதும்மா - குளிச்சாலும் சரி, இல்லை முகம் கழுவிட்டு வந்தாலும் சரி - சாப்பாடு ரெடி.

''தாங்க்ஸ் ஆன்ட்டி... நீங்க மீனாவை விடவும் ஸ்வீட்!''

குளியலறையின் சௌகர்யத்தைப் பார்த்தவர்கள் பசியை மறந்து அலுப்புத் தீர வெந்நீரில் குளித்தனர்.

புதுப் பூக்களாய் வந்து உட்கார்ந்து, இடியாப்பம், கறிக்குழம்பு, ரவாக் கிச்சடி, பாதாம் கீரை வெட்டியபடி சிலாகித்தனர்.

''சமையல் பிரமாதம், ஆன்ட்டீ.''

''இங்கே வியர்க்கவே யில்லீங்க - அதுவும் பிரமாதம் தான்.''

''தவிர, வாவ்! இங்கே கொசு, எறும்பெல்லாம் கூட கிடையாது, தெரியுமா?''

மீனா பீற்றினாள்.

நித்யா எதையோ நினைத்துச் சிரிக்க, புரையேறியது.

தலையைத் தட்டி விட்டு, ''சொல்லிட்டுச் சிரியேம்மா!'' என்றாள் பெரியவள் -

''எறும்புன்னதும் ஞாபகம் வந்திருச்சு, ஆன்ட்டி.''

''என்ன?''

''இந்த வருஷம் எங்க ஜூனியர்ஸை 'ராக்' செய்தது. ஒரு தீப்பெட்டி நிறையக் கட்டெறும்பு பிடிச்சு வச்சுக்குவோம். 2 முழ நூலோடு, வந்த புது மாணவக் குட்டிகளுக்கு ஆளுக்கு ஒரு எறும்பும் தந்திடுவோம். பிறகு...

''எறும்பை நூலிலே கட்டி 'வாக்' கூட்டிட்டுப் போகணும்னு உத்தரவு போடுவோம்.''

சொல்கையிலேயே சிரிப்பு முட்டியது.

''குறும்புக்காரப் பொண்ணுங்க... வேறென்ன?''

''ரெண்டு இஞ்ச் குச்சியைத் தந்து காலெஜை அளக்கச் சொல்வோம் - ஆனா பையன்க காலெஜ்ல பெரிய லெவல் ராகிங் நடக்கும்.''



''பசங்க அப்படித்தான்.''

''பூகம்பம் அடிக்கடி வந்திட்டிருந்ததா? அப்போ பொண்ணுங்க ஹாஸ்டலுக்கு மெடிக்கல் காலெஜ் பசங்க ஃபோன் செய்து, 'ஜியாலஜி ஆபீஸ்லேருந்து பேசறோம் - இன்னும் அஞ்சு நிமிஷத்துல உங்க ஏரியாவில் பெரிய பூகம்பம் வரப் போகுது, தப்பிடுங்க!'ன்னு சொல்லியிருக்காங்க.

''அன்னைக்கு மழை வேறங்க - அத்தனை பொண்ணுங்களும் ஒத்தர ஒத்தர் கட்டிட்டு அழுது, கைக்குக் கிடைச்ச சாமானுங்க, வார்டன் சகிதம் மழையில நிக்குதுங்க...

''அரை மணி நேரத்திற்குப் பிறகு பசங்க வந்து, இன்னைக்கு பூகம்பத்துக்கு வருவதற்கான மூட் இல்லையாம் - அதனால் விஸிட் கான்ஸல்ட். உள்ள போங்கனுட்டு கூலாய் தன் வழியே போனாங்களாம்.''

''ஆத்திரமாய் வந்திருக்குமே...?''

''அடுத்த நாள் பசங்க மெஸ் சமையல்காரருக்கு லஞ்சம் கொடுத்து சட்னியிலே டபுள் மிளகாய் போட்டு கொஞ்சம் ஆத்திகிட்டாங்க பொண்ணுங்க.''

எல்லாரும் வாய் விட்டுச் சிரித்த நேரம்.

''குட் ஈவ்னிங் பொண்ணுகளா - வெல்கம்!'' என்று அறையில் நுழைந்தார் கோவர்த்தனம் - மீனாவின் அப்பா.

அந்த அமரிக்கையான குரல், தீட்சண்ய விழிகள், விசால நெற்றி - பெண்களை மரியாதையாய் எழுந்து நிற்கச் செய்தன.

''உக்காருங்கம்மா - இந்த அமைதியான இடம் நீங்க ப்ராஜெக்ட் பற்றி யோசிக்க, தயாரிக்கத் தோது - இல்லியா?''

''ம்ம்... ஆமாங்க.''

''யார் என்னென்ன ப்ராஜெக்ட் பண்ணணும்?''

பேச்சு படிப்பு பக்கமாய்த் திரும்பியது.

இரவு 'ஹோம் தியேட்டரில்' சமீப வெற்றிப் படம் ஒன்றைப் போட்டு ரசித்து விட்டுப் படுத்தனர்.

''ம்ம்... உங்கப்பா சொல்றது போல ப்ராஜெக்ட் எழுத இது தோதான இடம்தான் - காலைல நல்லா ஒரு நடை.... சாப்பாடு. பிறகு வேலை. என்ன?

''இப்ப தூக்கம்ப்பா...'' போர்வைக்கு அடியிலிருந்து முனகல் வந்தது. ''குட் நைட்.''

அது ஒரு மோசமான இரவு என்பதை உணராமல் உறக்கத்துள் அமிழ்ந்தனர் நால்வரும்.

## 2



**லா**வண்யாவிற்குத் 'திடுக்'கென முழிப்புத் தட்டியது. காலில் ஏதோ உராய்ந்தது.

உதறித் தள்ளினாள்.

தள்ளப்பட்ட ஜந்து எழுந்து ஒயிலாய்ச் சோம்பல் முறித்தது!

''ச்சே... நீதானா? அம்மணி பாவம்னு டேபிளுக்குக் கீழே கறியும் பாதாம் கீரும் வச்சது எந் தப்புத்தான்... இப்ப ஏதுங் கிடைக்காது... போ...''

பூனை விரைப்பானது.

பதட்டமாய் இவளைப் பார்த்து 'மியாவ்' என்றது.

''சரி, போ... எனக்குத் தூக்கம் வருது.''

பயண அசதி அவள் கண்களை இழுத்துச் செருகியது.

பூனை அவதியாய் மீண்டும் மியாவியது.

''ம்ப்ச்... போ...''

லாவண்யா படுத்துவிட, பூனை அவள் கால்களைப் பிராண்டியது.

''உனக்குத் திண்ணக்கந்தான். எழுப்பிச் சோறு கேக்குதி யாக்கும்?''



அப்போதுதான் அது நேர்ந்தது...!

பூனை பாய்ந்து ஓடிப் போக,

கட்டிலோடு சேர்ந்து அந்த அறையே சன்னமாய் அதிர்ந்தது.

''அடப்பாவி... இதென்னாது?'' லாவண்யா திகைத் தாலும் பூனைக்குள்ள விழிப்புணர்வு கூடத் தனக்கு இல்லாவிடில் எப்படி எனும் உத்வேகத்தில் எழுந்தாள்.

''மீனா... எழுந்திரேன்... பூ... பூகம்பம்.''

''தீபு... அறை ஆடுதுடி... ப்ளீஸ் எழுந்திரு.''

'நித்யா... அப்.''

ம்ஹூம் - எல்லாருக்கும் ஆழ்ந்த நித்திரை.

''நித்யா! ஆக்டர் விஜய் வரார் - எழுந்து பாரு.''

இதற்குப் பலன் இருந்தது!

''யாழு... விஜிக் குட்டியா?''

''ஆமா குட்ட்டீ...! மகளே! இப்ப நீ எழுந்திருக்கலை, நமக்கு இதான் சமாதி, பூகம்பம்...''

ஒரு வழியாய் மற்றவர்களைக் கிளப்பி, கீழ் அறையில் படுத்திருந்த மீனாவின் பெற்றோர்களையும் உசுப்பி எழுப்ப, வீடு மறுபடி அதிர்ந்தது.

இம் முறை பலக்க!

அனைவருக்கும் கண்களை இருட்டியது. ஆனாலும் பயம் நெம்ப, வெளியே ஓடினார்கள்.

மகா ஓங்காரத்துடன் வீட்டின் ஒரு பகுதி சரிந்தது...!

குளிரிலும் பயத்திலும் நடுங்கியபடி, அந்தக் கம்பீர மான வீடு ஒடிந்து கால் மடித்து உட்காருவதை அதிர்ச்சி யுடன் கண்டிருந்தனர்.

உடம்பெல்லாம் விரைத்திருந்தது... புத்தி அதிர்ச்சி தாளாமல் மங்கி மழுங்கியது.

''இந்தாம்மா - சுக்குக் காபி சூடாய் இருக்குது பார்... இன்னும் ஒரு மடக்கு குடிச்சுக்கோ...''

''இந்தப் பொண்ணுக்கு இன்னொரு போர்வை குடுப்பா... காலு சில்லிடுது...''

இப்படியான கவனிப்பில் பெண்கள் சுதாரிக்க, பொழுது புலர்ந்திருந்தது. கோவர்த்தனம் அமைதி மாறாமல் சில உத்தரவுகளுடன் சுற்றி வந்து கொண்டிருந்தார்.

''என்னங்க... இப்படி... இப்படியாயிருச்சே...''

இப்படியே புலம்பினாள் அவர் மனைவி - மீனாவின் தாய்.

''அதனால என்ன பங்கஜம்? நாம எல்லாரும் தப் பிட்டோமில்ல? விஞ்ஞானத்தால இதுவரை மீட்க முடியாதது உயிர்தான்... வீட்டை இதேபோல எழுப்பிட லாம். கவலைப்படாதம்மா...''

சற்று அப்பால், பூகம்பம் அதிகமாய் அசைக்காத ஒரு சிறு வீட்டில் வைத்துப் பெண்களுக்கு உணவு தந்தனர் - சற்று நேரத்திற்குள் நசுங்கி, புழுதிபட்ட இவர்களது பெட்டிகளும் துணைக்கு வந்து சேர்ந்தன.

''பரவால்ல... துணியெல்லாம் உள்ளார அப்படியே இருக்குது.''

''நம்ப உயிர் உடம்புக்குள்ளே இருக்குதே - அதைச் சொல்லு.''

''உம் பூனைக்குத்தான் நாம நன்றி சொல்லோணும்... அது உரசி நான் எழும்பினப்பத்தான் முதல் ஆட்டம்... ஹூக்.'

தோளைக் குலுக்கிக் கொண்டாள் லாவண்யா.

''மீனு! நீ எங்களோட கிளம்பு - வா.'' தீபா அனு சரணையாய்ச் சொன்னாள்.

''ம்ஹூம்... அப்பா, அம்மாவை விட்டுட்டு நான் எங்கயும் வரலை.''



அந்நேரம் நுழைந்த கோவர்த்தனம் ஆமோதித்தார்.

''மீனு... அவங்க சொல்றதுதான் சரி. இங்கேயே இருந்தால் அதிர்ச்சியிலேருந்து மீளறது சிரமம். அதுவும் ஒரே வார விடுமுறை உங்களுக்கு - ஆக நீங்க எல்லாரும் ஒத்தப்பனூர் போக ஏற்பாடு செய்திருக்கேன் - அதான் உங்க பெட்டிங்க இங்க வந்திருக்குது...''

''ஒத்தப்பனூர்னா...''

''என் சிநேகிதன் மகாதேவ்வோட ஊரும்மா. இப்ப என் ஆராய்சியும் கூட அந்த ஊரைப் பற்றிதான். மூணு நாளிலே உங்களை அங்கே அழைச்சுட்டுப் போறதாய் இருந்தேன்...''

''ஆனா அப்பா... நானே இதுவரை அங்கே போன தில்லை - அந்த அங்க்கிளைப் பார்த்ததுமில்லையே?''

''ஹாஸ்ட்டல்ல நீ யிருக்க, சந்தர்ப்பம் வாய்க் கலைம்மா மீனு. நானும் அவனும் ஈ-மெயில்ல அடிக்கடி பேசிப்போம் - நல்ல வேளை, முன்னறையில் வச்சிருந்த கம்ப்யூட்டர் சேதப்படலை... வீட்டோடு ஒரு பாதிதான் சரிஞ்சிடுச்சு...''

ஒரு ராட்சஷன் மண்டியிட்டது போலக் கவிழ்ந்து விட்ட தன் வீட்டை நினைத்ததும் மீனா விசும்பினாள் -

''என்னப்பா... இப்படி யாயிருச்சு...!''

தோழிகளாலும் கண்ணீரைத் தடுக்க முடியவில்லை.

''இயற்கை அப்பப்ப இப்படிச் சீறிடுவா... மனுஷன் அவளை நயந்துதான் பேகணும். இப்ப நான் அவளை மாற்ற வரேங்கற கோபம்... அதுதான் இப்படி என்னை மிரட்டறா போல..''

தந்தை சொல்வது புரியாமல் விழித்தாள் மகள்.

''ஈ-மெயில் மூலம் செய்தி அனுப்பினேன் - மகாதேவ் ரொம்ப வருத்தப்பட்டு உடனே கிளம்பி வாங்கறான் -

ஆனா வீட்டை இப்படியே போட்டுட்டும் கிளம்ப முடியாதே... முதலில் நீங்க நாலு பேரும் கிளம்புங்க... எனக்கும் அங்க வேலை இருக்கறதால மூணாம் நாள் வந்திருவேன்... சரியா?''

பெண்கள் ஒருவர் முகத்தை மற்றவர் பார்த்துக் கொண்டனர். அவர்களுக்கு இன்னும் சிந்தனை, பேச்சு ஏதும் சரளமாகவில்லை.

இந்நிலையில் தெரியாத ஊருக்குப் போகும் தயக்கம் மிகுந்தது. இவர்களைத் தேடி வந்த மீனாவின் தாய் தலை கலைந்து விழி சிவந்து பாவமாய்த் தெரிந்தாள் -இவர்கள் குழப்பம் புரிந்து,

''வீட்டிலே ஒரு வாரத்துக்கான அனுமதி வாங்கிட்டுங்க - புது இடமாய்ப் பார்த்துட்டுத்தான் போங்களேன் - அந்த வீட்டிலேயும் உங்க வயசுல ஒரு பொண்ணும் அதுக்கு ஒரு தம்பியும் உண்டு. அருமையான பிள்ளைங்க... சுற்றிலும் கடலு... உங்களுக்கு ஒரு மாற்றம்... எங்களுக்கும் நிம்மதி - என்னம்மா?''

இடையிடையே மூக்கு உறிஞ்சியபடி அவள் சொல்ல, இளையவர்களுக்குச் சம்மதிப்பதைத் தவிர வேறதும் செய்யத் தோன்றவில்லை.

''சரிங்க ஆன்ட்டி. நீங்க அழாம தைரியமாய் இருக்கோணும்...''

டாக்ஸி பயணத்தில் நான்கு பேரும் தூங்கி விழுந்தனர் - நேர்ந்தது லேசுப்பட்ட அதிர்ச்சியா என்ன?

ஆனால் ஒரு ஓடைப் பக்கம் டாக்ஸி ஓரங்கட்டவும் விழிப்புத் தட்டியது.

''என்னாங்க ட்ரைவர்?''

''சாப்பிட்டுரலாம்மா - இறங்குங்க.''

''எங்களுக்குப் பசிக்கலை.''



''ஓடைத் தண்ணியிலே முகங் கழுவிட்டு சாப்பிட உக்காந்தா, வயிறு இன்னும் தா, தாங்கும்மா - அன்னம்மா கைப்பக்குவம் அப்படி...''

முகம் கழுவி ஓட்டுனர் ஒதுங்கிவிட, பெண்கள் இறங்கினர். குளிரில் கால்கள் சற்று வெடவெடத்தன.

அவர்களை ஆசுவாசப்படுத்துவதாய், பெரும் இலைகளுடன் இருந்த தேக்கு மரங்கள் அசைந்து சாமரம் வீசின.

ஓடை இனிமையாய் அழைத்தது.

அதில் இறங்கிச் 'சில்'லென்ற நீரை அளைந்தனர். பன்னீராட்டம் குளிர்ந்த அந்நீரை மேலெங்கும் தெளித்துக் கழுவிக் குடித்தனர். அமிர்தம் போல அது அவர்களை உயிர்ப்பித்தது.

''வரணும் மக்களே... இலை போட்டாச்சு...''

அருகிருந்த கீற்றுக் கொட்டகையிலிருந்து அழைப்பு வந்தது.

உணவின் மணத்தை நுகர்ந்தபடி அதனுள் நுழைந்தனர் நால்வரும். சுத்தமாய் மெழுகி, நான்கு எளிய மேசை, பெஞ்சுகளுடன் இருந்தது அக்கடை.

கூரையின் மூங்கில் கம்பங்களில் நேந்திரம் பழக் குலைகள் வரிசையாய்த் தொங்கின.

பழப் பஜ்ஜியைப் பரிமாறிய கிழவி, முண்டும் சட்டையுமாய் இருந்தாலும், பேச்சில் நிறையத் தமிழ் மணம்.

பட்டுத் தோசைகளின் துணைக்குத் தேங்காய்ச் சட்னியும் மிளகுத் தொக்கும் வர, சாப்பிட ஆரம்பித்தனர் - உணவு இறங்க இறங்கத்தான் தங்கள் பசி அவர்களுக்கே புரிந்தது.

முடிவில் பாலில்லாது, வெல்லமிட்ட தேத்தண்ணீர் ஆவி பறக்க வந்தது.

ஓட்டுனரிடம் தங்களைப் பார்த்தபடி முதியவள் ஏதோ பரபரப்பாய்ச் சொல்வதைப் பார்த்த மீனாவிற்குப் பொறுக்கவில்லை...

''என்ன சொல்றீங்க, பாட்டி?''

''பார்த்து இரிக்கணும் மக்களே - போற இடம் அப்பிடி யாப்பட்டது.''

''எது ஒத்தப்பனூரா?''

தலையைத் துக்கத்துடன் அசைத்தாள் கிழவி.

''அதுதன்னே - உங்கப்பாருக்கு இதிலெல்லாம் நம்பிக்கை இல்லா- ஆனாலும் இத்தனை துணிவாய் கன்னிப் பொண்ணுங்களை, அதிலும் பறிச்ச கிழங்காட்டமுள்ள சுந்தரிகளை அங்க அனுப்பலாமா?''

''அப்பாவின் சிநேகிதரோட வீட்லதான் பாட்டி தங்கறோம்.''

''ம்ம்... கடலின்ட விரலுங்க வலுவானது மக்களே... அதுட்ட சிக்காம பத்திரமாயிட்டு திரிச்சு வரணும்.''

''கடல் விரலா - அதென்ன?''

கேட்கும் போதே பெண்களின் பிடரியில் பயம் ஊர்ந்தது.

''டிரைவரு போகும்போள் உங்களுக்கு ஆக்கதையச் சொல்லும்... கரையெல்லாம் கடல் விரலின்ட தடயம் கிடக்கும்... பார்த்த பிறகு புரியும், மக்களே! ஆனா சுதானம்... வீட்டை விட்டு வெளியே இறங்கன்டாம் கேட்டே?''

அம்முதிய முகத்தின் அச்சமும் வருத்தமும் இவர்களுக்குள் பாய்ந்தது.

ஆனாலும் பயணம் தொடர்ந்தது.

## 3



கேரள எல்லையை ஒட்டி மலைப் பாதை ஆரம்பித்தது.

இரண்டாம் கியரில் முனகலுடன் மலை ஏறியது வாகனம்.



''ஒத்தப்பனூர் மலை மேலேயா இருக்குது?''

''மறுபக்கச் சரிவுல இருக்கம்மா ஊரு.''

தெரிந்த குன்று பெண்களை அச்சுறுத்தியது.

அடிவாரத்தைப் பனி மூட்டம் மறைத்திருக்க, 'முணுக் முணுக்'கெனச் சில விளக்குகள் சோம்பலாய்க் கண் சிமிட்டின.

''அது... அது ஊரு மாதிரித் தெரியலியே?''

''இருவது வீடுங்க இருக்குங்கம்மா - சுற்றிலும் சதுப்பு நிலமா... அதான் இந்தப் பக்கம் யாரும் துணிஞ்சு தங்கறதில்லை.''

''கொஞ்சம் விவரமாய்ச் சொல்லுங்கண்ணே... அப்பத்தான் நாங்க எச்சரிக்கையாய் இருந்துக்குவோம்?''

தூண்டிலை இயல்பாய் வீசினாள் தீபா.

''சதுப்பு நிலத்துல உழுதது போலப் பெருங் கோடுங்க இருக்கும்மா... ராட்சசப் பாம்புகள் ஊர்ந்து போன தடம் மாதிரி... அதைத்தான் கடல் விரலுன்றாங்க...''

பெண்களுக்குப் பயத்தில் மீண்டும் பிடரி குறுகுறுத்தது.

''பார்க்கப் பயங்கரமாயிருக்கும்... அவ்வளவுதானா?''

''அதில்லம்மா... வந்து... அங்கத்திய நடவடிக்கைகள் சரியில்லம்மா... அது ஆபத்தான நிலம். அதுல விழுந்து சில பேர் அப்படியே காணாமல் போயாச்சு. அந்த மண்ணு ஆளுங்களைப் பிடிச்சு விழுங்கறதால கடல் விரலுங்கற பேர்.''

''அந்தப் பாட்டி ஏதோ கன்னிப் பொண்ணுங்க பத்திரமாய் இருக்கணும்னாங்களே?''

''அதாவது... இதுவரை இந்த ஊர்ல நாலைஞ்சு பொண்ணுங்க காணாமல் போயிடுச்சுங்க... அதுங்களைக் கடல் பிடிச்சு விழுங்கிட்டதாய் நம்பிக்கை. அதுக்கு ஊர்ல ஒரு கதை வழங்குது... அதை வேணும்னா சொல்லட்டா?''

புகை படர்ந்த குன்றில் ஏறிக் கொண்டிருந்தனர்.

ஏதோ ஆபத்தை நோக்கிச் செல்கிறோம் என்பது புரிந்தது. அதைப் பற்றி மேலும் விபரங்கள் வேண்டும் என்ற இளமைக் குறுகுறுப்பு வேறு.

''சொல்லுங்கண்ணா.''

''பயந்துக்க மாட்டீங்களே?''

ஓட்டுனர் சொல்வதா வேண்டாமா என்று அல்லாடினார்.

''எங்களுக்குப் பேய்ப் படம்னா அல்வா சாப்பிட றாப்பல... சொல்லுங்க.''

ஊக்கினாள் நித்யா.

''கடைசில உன் ஹீரோவைப் பேய்னு ஒத்துக்கிட்டியா?''

லாவண்யா ஆச்சரியமாய்க் கேட்டு, 'நசக்'கென்று குட்டு வாங்கினாள்!

''பல நூறு வருஷங்களுக்கு முன்னே நடந்ததாம் - அப்ப இந்த ஊரு இப்படி மருபோல உருண்டு தனியாக் கிடக்கலை. ஒரு பக்கம் மட்டுந்தான் கடல். பெரிய மீனவக் குப்பமாம் இது.மீனவத் தலைவனுக்கு ரொம்ப அம்சமான ஒரு மகள் இருந்தாளாம் - பேரு முத்தழகி.''

''ம்ம்.''

''தினம் கடல்லேருந்து நீந்திக் கரையேறின ஒரு வாலிபன் மேல அவ நோக்கம் விழுந்திருச்சு. வெகு தூரம் நீந்தி வலு ஏறின அவன் கையும் மாரும், தேஜஸ்ஸான அவம் முகமும் கண்டவளுக்கு நிதம் நிதம் அவனைப் பத்தியே சிந்தனை...''

இப்போது பெண்கள் ஒருவரை ஒருவர் கள்ளச் சிரிப்புடன் பார்த்துக் கொண்டனர்.

''ம்ம்...''

''அவன்கிட்ட போய்ப் பேச்சுக் கொடுத்தாளாம் - தான் பக்கத்துக் குப்பத்திலிருந்து நீந்தி வரதாயும்... இங்குள்ள கோயில்ல ஏதோ வேண்டுதலைன்னு அந்தப் பிள்ளை சொன்னது... பொய்! - அவன் கடலுக்கே இளவரசன்.''



இப்போது பெண்கள் புருவங்களை உயர்த்தினர் - உதடுகள் ஏளனமாய்ச் சுழித்தன.

''இளவரசுக்குக் கடலை ஆளணுங்கற ஆசை இல்லை. அவனுக்குத் தான் பூமியிலே சாதாரண மனுஷனாய் உழைச்சுப் பிழைக்கணும்... வாழ்வை அனுபவிக்கணுங்கற நோக்கம். தன் அப்பனை... அதாவது கடல் ராசனை ஏய்ச்சுட்டு இப்படி தினம் கரையேறுறது... பூமியில உலாத்திட்டு மறுபடி கடலுக்குத் திரும்பிடறதுன்னு இருந்தான்...''

''ம்ம்.''

''முதலில் பேச்சுக் கொடுத்த முத்தழகிப் பொண்ணு பிறவு அவனுக்கு ருசியான பதார்த்தம் செஞ்சு எடுத்தாந்தா. அவனுக்குப் பட்டு உருமாலும் கச்சும் கொண்டு தந்தா. அவனுக்கும் பொண்ணு மேல நோக்கமாயிருச்சு.''

''அப்பா அம்மாவுக்குத் தெரிஞ்சதும் வேட்டு வச்சிருப்பாங்களே!''

ஓட்டுனர் சிரித்துக் கொண்டார்.

''எல்லாக் காலத்திலேயும் அப்படித்தானேம்மா - பொண்ணு தன் விருப்பத்தைச் சொல்லவும், தகப்பன் மக ஆசைப்பட்ட பயலைப் பார்த்தான் - ரெண்டு ஆட்களை விட்டு வேவு ஆராய்ஞ்சான். மூணாம் நாளே குட்டு வெளிப் பட்டிருச்சு... இவன் நம்மாளு இல்ல.. சமுத்திர ஆளுன்னு.''

''இது வேறு விதமான ஜாதிப் பிரச்சனைங்க...''

உதடு பிதுக்கினாள் லாவண்யா.

''ஆமாம்மா... ஆனா பொண்ணு பிடிவாதம் பிடிக்குது... பையனுக்கும் இவ மேல உசிராயிடுச்சு... பாவம்...''

''ஐயோ! கதை ட்ராஜடியா?''

''ஆமாங்க. பயலோட அப்பா சொல்லிட்டாரு. நீ அவளைக் கல்யாணம் செய்துகிட்டால் கடல்லயே குடித்தனம் பண்ணு... இனி நீ கரையேறுனாப் பிரச்னை

தான்னு. இளவரசும் ஒத்துகிட்டு, பொண்ணை அதுக்குச் சம்மதிக்கப் பண்ணிட்டான். பொண்ணுக்கு அப்பன்காரனோ,

'இனி கடல் இளவரசைத் தரையில பார்த்தாக் கொன்னுடுங்க. கொல்றவனுக்கு பத்துத் தோணியும் ஒரு மரக்கால் அளவு முத்தும் பரிசுங்கறான்...''

''பிறகு?''

''அன்னைக்குப் பௌர்ணமி ராத்திரி... அலைங்க பனைமர உசரத்துக்கு எம்பி எம்பி ஆட்டம் போடுது. இளவரசு கடைசி முறையாக் கரையேறுனானாம். சங்காட்டம் அவன் எழுப்பற சத்தத்துல இந்தப் பொண்ணு எழுந்து, ஊர்ந்து ஊர்ந்தே கடற்கரைக்கு வந்திருச்சு... நிலா வெளிச்சம்... ஊழிக்காத்து... அவன் முகம் தேஜஸாத் தெரியுது...''

பெண்கள் மூச்சை இழுத்துப் பிடித்தபடி கதை கேட்டனர். ''முத்தழகி அவனை நோக்கி ஓடினா... அவனும் கை நீட்டியபடியே வர, விழுந்துச்சு வெட்டு...! இளவரசனுடைய கை மணிக்கட்டோட துண்டாகி மண்ணுல விழுந்திடுச்சு...''

''அச்சச்சோ... வெட்டுனது யாரு?''

''பரிசுக்கு ஆசைப்பட்ட ஒருத்தன்! அடுத்த வெட்டு காதலனோட கழுத்துக்குன்னு அஞ்சின முத்தழகி, குறுக்கே பாய்ஞ்சா... 'ஓடிருங்கோ'ன்னு அவனை விரட்டறா, கெஞ்சறா... பரிசுக்கான ஆத்திரத்துல இளவரசைக் கொல்லும் வேகத்துல மங்கின நிலா வெளிச்சத்துல எதிரி வீசின கோடரி முத்தழகி தலையைக் கொய்திருச்சு... இளவரசன் கைக்கு நடுவே உருண்டு போய்க் கிடக்குது பொண்ணு தலை!''

''ச்சோ...''

''காதலிச்சவ கிடைக்காத ஆத்தாமை, அவ சாவைக் கண்ட துக்கத்துல இந்த ஊரே ஒத்தையாய்ப் போவட்டும்... இந்த மண்ணு கிடைச்சதை எல்லாம் விழுங்கட்டும்... எந்



நெஞ்சைப் போல இங்கிருக்கிற நெஞ்சுகளும் வேகட்டும்னு... சாபம் விட்டான் சமுத்திர இளவரசு.''

''ஓஹோ... அப்ப ஊருக்குக் காரணப் பெயரா?''

சன்னமான உறுமலுடன் ஓடிய கார் நின்றது -

விரல் நீட்டிக் காட்டினார் -

''அதோ தெரியுதுல்ல... வரிவரியாய் ஈரச் சதுப்புல... அதான் கடல் விரலு. அதுக்கு எதிர்புறம் ஐயா வீடுதான்.''

பெண்கள் கண்ணாடிக் கதவு வழியே மருண்டு பார்த்தனர். கதை கேட்ட சூட்டோடு பார்த்த 'கடல் விரல்'கள் மிரட்டின.

''இதற்கு நடுவே எப்படிப் பாதை போட்டாங்க?''

''பாறையும் கல்லும் கொட்டி, மேலாகச் சிமென்ட் பூசினாங்கம்மா - அதுக்கே கொள்ளைச் செலவாயிருக்கும். ஆனால் மகாதேவ் ஐயா புஸ்தகம் எழுதறவராமே... அதனால இப்படித் தனிமையான இடம்தான் தன் வேலைக்குத் தோதுன்னு வந்துட்டாரு.''

''எழுத்தாளர்னா திகில், திரில் கதைகளை எழுதுவாரோ?''

''இல்லை. மொழி பெயர்ப்பு, அறிவியல் பற்றிய ஆராய்ச்சிக் கட்டுரைகள்... இப்படி எழுதுவாராம் - அப்படித்தான் அப்பாவுக்குப் பழக்கம்.'' மீனு விளக்கினாள்.

''நீயும் அவரை இதுவரை சந்திச்சதில்லை... எல்லாருமாய் ஒரு புது இடத்துக்கு வந்திருக்கோம்... இந்த அனுபவம் எப்படியிருக்குமோ - பார்ப்போம்!'' குரலைத் தழைத்துத் தோளை உயர்த்தினாள் நித்யா.

★ ★ ★

''டேய் சதீஷ்... ப்ளீஸ்... ஒரு துண்டாவது எடுத்துக் கோயேன்.''

தட்டுடன் தம்பியின் பின்னே போய்க் கெஞ்சினாள் சாதனா.

''எனக்கு வேணாம். இந்த இனிப்பை யாருக்காகச் செய்தியோ, அவங்க வந்ததும் இப்படிக் கெஞ்சி, கொஞ்சிக் கொடு.''

''வர்ற விருந்தாளிகளுக்காய்ச் செய்ததுதான் -ஆனா ஏன் உனக்குப் பிடிச்ச சாக்லெட் தேங்காய் பர்பியைச் செய்தேன்? நீயும் சாப்பிடணும்னுதானே?''

''வந்தவங்க சாப்பிட்ட பிறகு ஏதேனும் மிஞ்சினாத்தான்.''

தம்பியின் பிகு ஏறியது.

''சரி, நீ சாப்பிடாதது வர்ரவங்களுக்கும் வேணாம் போ...''

சாதனா 'விருக்'கென்று விலக, சதீஷின் சுருதி இறங்கியது.

''அதை என்னபண்ணப் போறே? நீயே சாப்பிட்டுறப் போறியா?''

வந்த சிரிப்பை அடக்கியபடி அலட்சியமாய்ச் சொன்னாள் தமக்கை -

''காக்காய்க்குப் போடப் போறேன்.''

''காக்காக்குச் செத்த எலிதான் பிரியம்... சரி, அதைக் கொண்டா - நானே தின்னு தொலைக்கறேன்.''

''அப்படி வா வழிக்கு... அதுக்கு ஏண்டா என்னை இப்படித் தாங்க வைக்கறே?''

ஒரு இனிப்பு வில்லையைத் தம்பிக்கு ஊட்டியபடி அலுத்தாள் அக்கா.

''நீயும் இப்ப என்னைத் தாங்குவே... அவங்கெல்லாம் வந்ததும் என்னைக் கண்டுக்கமாட்டேல்ல?''

இனிப்பைக் குதப்பியபடி குறைப்பட்டான்.

''எவங்கடா அவங்க? உன்னைப் போல அவங்களை நானும் முன்னே பின்னே பார்த்தது இல்லையே...''

எரிச்சலாய்ச் சொன்னாலும் சாதனாவின் மனம் இளகியது. இந்த ஆளண்டா ஊரில், பெரிய மாளிகை போன்ற வீட்டில் இருந்தாலும், யாரும் இவர்களைத் தேடி விருந்தாடி வருவதில்லை.

அம்மாவின் ஆஸ்துமா இளைப்பும், எழுதும் அப்பாவின், 'நானுண்டு என் வேலை உண்டு' என்ற ஒதுங்கலும் இரு பிள்ளைகளைத் தனிமைப் படுத்தி இருந்தன.



விடுதிகளில் தங்கிப் படிக்கும் சாதனா, சதீஷிற்கு விடுமுறை சமயம் வீடு வரும்போது ஒருவருக்கு ஒருவர்தான் ஆதரவு.

இச்சமயம் நான்கு கல்லூரிப் பெண்கள் இங்கு வந்து தங்கப் போகிறார்கள் என்பது மகிழ்ச்சிதான் என்றாலும், எங்கே அக்கா தன்னை 'அம்போ'வாக்கிவிட்டுப் புதுத் தோழிகளுடன் ஐக்கியம் ஆகிவிடுவாளோ என்ற கலக்கம் தம்பிக்கு.

''பார்த்ததும் 'ஹிஹி'ன்னு இளிச்சுட்டு அவங்களோட போயிருவேல்ல?''

'சப்சப்' என கொக்கோ வழியும் பர்பியைச் சுவைத்தபடி சந்தேகப்பட்டான்.

''அப்புறம் நான் அந்த ரப்பர் மூஞ்சியையே பார்த்துட்டுக் கிடக்கறதா?''

''நாம ஏன் அவனை - அந்தச் சக்கரபாணியை-ப் பார்க்கறோம்? அவந்தான் நம்மைக் குத்தற மாதிரி முறைச்சு முறைச்சுப் புரா்ப்பான்.

''ஏன்க்கா ஒருவேளை சக்கரத்துக்கு உண்மையிலேயே காது கேட்காதோ? அதனாலதான் அப்படி உத்து உத்துப் பார்க்கறானோ?''

''என்னவோ போ... இப்ப அவனைப் பற்றி என்ன பேச்சு. அப்பாவுக்கு அவன்தான் வலது கரம். தனக்குக் கூப்பிட்டாக் கேட்காதுங்கற சாக்குல அவனும் சதா அப்பா காலையே சுத்திட்டுக் கிடக்கறான்.''

''நம்ப உதட்டு அசைவு வச்சே நாம என்ன பேசறோம்ங்கறதைக் கண்டுக்கறாப்பல பார்க்கறான். ஆனால்...''

அப்போது கதவு தட்டப்பட்டது. இவர்களது அனுமதியை எதிர்பாராமல் மறு நொடியே கதவு தளளித் திறக்கப்பட, இவர்கள் எதிர்பார்த்தது போல வந்திருந்தது சக்கரபாணிதான்.

எல்லாருக்கும் 'சக்கரம்.'

''விருந்தாளி வந்தாச்சு... அப்பா உங்க ரெண்டு பேரையும் வரச் சொன்னாங்க.''


ரப்பரால் ஒரு முகமூடியை மாட்டி விட்டாற் போல உணர்ச்சிகள் அற்று இருந்தது அவன் முகம். ஆனால் கண்கள் மட்டும் அங்கும் இங்குமாய்க் கூர்ந்து துழாவியபடி...

''போ... நாங்க வர்றோம்.''

சைகை செய்தான் சதீஷ்.

''உடனே வரச் சொன்னாங்க, ஐயா.''

''அடப் போடா - வர்றோம்!'' சதீஷ் அடிக்குரலில் சொல்ல, சக்கரத்தின் முகம் இறுகியது. கறுப்புக் கோலிகள் போன்ற அவன் கண்களில் தெரிந்த கோபச் சாயலைக் கண்ட சதீஷ், சாதனா சற்று அஞ்சிப் பின் வாங்கினர்.



4

மொட்டை மாடியின் பிடிச் சுவரில் வழக்கமான காக்கைகளுக்குப் பதிலாக இன்று அந்த ஆறு பேரும் அமர்ந்திருந்தனர்.

''நேற்று மாலை அரை இருட்டிலே உங்க ஒத்தப்பனூர் பயங்கரமாய்த் தெரிஞ்சுது. ஆனா காலையில் கண்ணுக்குக் குளுமையாய்ப் படுது- சுத்திலும் கடல், சதா காற்றுன்னு...''

தீபாவின் பாராட்டில் சாதனாவின் முகம் மலர்ந்தது.

''அப்ப நாளைக்கே கிளம்பிட மாட்டீங்கல்ல?''

ஆர்வமான கேள்வியில் நான்கு தோழிகளும் நெகிழ்ந்து விட்டனர். ''இருக்கோம் - ஆனா, சாதனா! உங்களுக்கு இங்க எப்படிப் பொழுது நகருது? கோடை விடுமுறைன்னால் ரெண்டு மாசமாவது இங்கதான் இருப்பீங்க - வீடு பெருசுன்னாலும் உள்ளேயே எப்படி இருக்கறது? உங்கப்பா வீட்டை விட்டு வெளியே போகவே கூடாதுன்றாங்க!''

பரிவாய்க் கேட்டாள் மீனா.



''இங்கே சினிமாத் தியேட்டரும் கிடையாதுன்றீங்க... நான் இங்கேயிருந்தால் மூச்சு முட்டியே செத்துடுவேன்.''

கைகளை நெஞ்சில் வைத்து அங்கலாய்த்தாள் நித்யா.

''போதும்டீ அம்மணி - ஓவர் ஆக்டிங் விடாதே.''

''முதல்ல வீட்டை விட்டுக் கிளம்பவே வழி இல்லையே...''

''இருக்கு நித்யாக்கா...'' என்ற சதீஷ் தன் அக்காளை அர்த்தத்துடன் நோக்கினான்.

அவனுக்குப் புதிதாய்க் கிடைத்த சகோதரிகளைப் பிடித்துப் போனது. அவர்களும் தம்பி இல்லாத குறை தீர சதீஷிடம் பிரியமாய்ப் பேசிப் பழக அவனுக்கு ஒரே பெருமை.

அஞ்சியது போல ஐந்து பெண்களும் சேர்ந்து கொண்டு தன்னை 'அம்போ' என்று விட்டு விடாத குஷி!

ஆக, தானும் அக்கா சாதனாவும் இத்தனை நாட்கள் தங்களுக்கிடையே மறைத்திருந்த ரகசியத்தை இவர்களுடன் பகிரத் தயாராகி விட்டான்.

ஆனால் சுகுணா மூத்தவள் -

அத்தனையையும் உடனே கொட்டிக் கவிழ்க்கக் கூடாது என்ற நிதானம் புரிந்தவள்.

''இங்கேருந்து வெளியே போக வழியிருக்குதா, சதீஷ்?'' மீனா கேட்க,

''ம்ம் - ரகசியப் பாதை.''அவன் குரலும் ரகசியத் தொனியில் தழைந்தது.

''ஏய்... உடான்ஸ் உடாதப்பா!''

''உடான்ஸ்னா? பொய்யா? நிஜமாத்தான்க்கா சொல்றேன் - இது ஜமீன் மாளிகை. ஒரு ஜமீன்தார் கிட்டேயிருந்துதான் அப்பா வாங்கினாங்க.''

''ம்ம்... மாளிகையாட்டம் பழசாய்த் தெரியுதுதான்...''

''இங்கேருந்த ஜமீன் கள்ளக் கடத்தல் கூடச் செய்தாராம்!''

''அடடா... இது ரொம்ப ரீல்டாப்பா!''

லாவண்யா சிரிக்க, சிறுவனின் முகம் சுண்டியது.

''சொல்லேன்க்கா...'' - தன் தமக்கைக்கு உத்தர விட்டான். ''இங்கே முன்னே வாழ்ந்தவங்க பெரும் பணம் சேர்த்தது கள்ளக்கடத்தல் மூலம்தான்னு கேள்வி. பணம் பெருகினதும் தங்களையே ஜமீன் பரம்பரைன்னு சொல்லிட்டு, முகட்டிலே நின்ற வீட்டைப் பெருசாய் எடுத்துக் கட்டிட்டாங்க. ஓரளவு பாதையும் போட்டாங்க. ஆனால் அந்தக் குடும்பத்துக்கு ஆண் வாரிசு இல்லை. பொண்ணுங்களைக் கட்டிக் கொடுத்து அவங்களும் போன பிற்பாடு இந்த வீடு விற்பனைக்கு வந்ததாம். அமைதியான இடம்... தன் எழுத்துக்கு வசதிப்படும்னு அப்பா இதை நிறைய விலை கொடுத்து வாங்கிட்டாங்க.''

''அம்மாக்கு இந்த உப்புக் காத்து ஒத்துக்கலை - இருமல், இளைப்புன்னு, பாவம்! கஷ்டப்படுவாங்க... ஆனாலும் அப்பாவுக்காக இருக்கறாங்க.''

''ம்ஹூம்? முக்கியமான விஷயத்துக்கு வாங்கப்பா- அதென்ன ரகசியப் பாதை?''

அக்காளும் தம்பியும் மறுபடி பார்வைகளைப் பரிமாறிக் கொண்டனர்.

''அது ஒரு மாதிரியான சுரங்கப் பாதை. சதீஷ் அறை யிலே சுவரோடு பதிச்ச ஒரு பெரிய அலமாரி உண்டு. அதன் கீழ்த்தட்டுக்குப் பின்னே உள்ள மரப்பலகைதான் அதுக்கான வாசல்!''

''தற்செயலாய் ஒரு நாள் எலி அடிக்கறப்ப அதைக் கண்டு பிடிச்சோம்.''

''இவன் துணிச்சலாய் அதுக்குள்ளே டார்ச்சைப் பிடிச்சுட்டு இறங்கிட்டான்.''

''உள்ளே எப்படியிருந்தது?''

''அங்கங்கே தண்ணி கசியும். நண்டு ஓடும். இடது, வலது பக்கமாய் வேற பாதை கிளை விடும்... திரும் பினால் தொலைஞ்சோம். நேரே போனால் சீலாயி வீட்டுப் பின்புறமாய்க் கொண்டு விடும்.''



''அது யாரு?''

''ஒரு கிழவி. புட்டு, மீன் வறுவல்னு செய்து விற்கும். இங்கே பிரசித்தியான உணவகம் அதுதான் - சீலாயி மெஸ்.''

''வீட்டம்மா சரியாய்ச் சாப்பாடு போடலைன்னா ஜமீன் தார் சுரங்கத்து வழியாய் நழுவி சீலாயி சாப்பாட்டை ஒரு பிடி பிடிச்சுட்டு வந்து படுத்துக்க வசதியாய்க் கட்டியிருப் பாரோ?''

''நாம எப்போ அதன் வழியாய் வெளியே போகலாம் - அதைச் சொல்லு...''

''எதுக்கு? புட்டு சாப்பிடவா? பறக்காத - வெளியே சுவாரஸ்யமாய் ஏதேனும் இருந்தாப் போகலாம்...''

''ரகசியமாய்ப் போறதே ஒரு சுவாரஸ்யந்தானே? மதி யம் தூங்கறதாய் பாவ்லா காட்டிட்டுக் கிளம்பிடலாம்.''

''ஆலை இல்லாத ஊருக்கு இலுப்பைப் பூதான் - சரி.''

அலட்சியமாய்த் தோளைக் குலுக்கின லாவண்யா, தன் முன் 'திடும்'மெனத் தோன்றின உருவத்தைக் கண்டு திகைத்தாள்.

பூனையாய்ப் படியேறி வந்த சக்கரபாணி மாடிப்படி வாச லில் பிரதியட்சமாக, எல்லாருக்குள்ளும் ஒரு குலுக்கல்...!

''ஏன் சக்கரம்... கீழே வரும்போதே சத்தம் கொடுக்கக் கூடாது?''

சாதனா கத்தியதைச் சட்டை செய்யாமல்,

''சாப்பிட வரணுமாம் - அம்மா கூப்பிட்டாங்க.''

உணர்ச்சியற்ற குரலில் அறிவித்து விட்டுப் போனான்.

''ஹக்! ஒரு நிமிஷம் அரண்டுட்டேன்... ஆனா, பாவம்! அவனுக்கு நீ சொன்னது புரியலை, சாதனா... அதாவது கேட்கலை.''

மறுபடியும் அக்கா தம்பிக்கிடையே பார்வைப் பரிமாற்றம்.

''என்ன அப்பப்ப இப்படி ஒரு 'லுக்' விட்டுக்கறீங்க?''

''இல்ல... கேட்டாலும் புரிஞ்சாலும், சக்கரம் வேணும்னே இப்படித்தான் நடந்துக்குவான்.''

''வழக்கமாய் ஊனமுற்றவங்க மேல் நமக்கு அனுதாபம், பரிவு தோணும் - ஆனா சக்கரத்தைப் பார்த்தால் அப்படித் தோணலை.''

''ஏன்னா அவன் ஆளு சரியில்லை, மீனாக்கா. அவனுக்குக் காது கேட்கும். ஏதோ விவரமாத்தான் இப்படிப் பொய் சொல்லிட்டு நம்ப வீட்டில நடமாடுறான்னு சந்தேகம் எங்களுக்கு...''

''கடவுளே... இது நிஜமாவே மர்ம மாளிகைதாம்ப்பா - சாப்பிடப் போவோம்.''

யோசனையுடன் பெண்கள் படியிறங்கினர்.

★ ★ ★

**சா**தனாவின் தாயார் அன்பாய் உபசரித்தார்கள்.

சின்ன உருவத்திற்குப் பொருத்தமான சன்னக் குரல். எளிமையான உடை - அதற்கு ஈடுகட்டும் அருமையான புன்னகை. கணவன் 'சுகுணா' என்று அழைத்ததும் சற்று மிரண்டாற் போலொரு பார்வை. ஆனால் சாதனாவின் தகப்பன், எழுத்தாளர் மகாதேவை இளம் விருந்தாளிகளுக்குப் பிடிக்கவில்லை.

அவருடன் அமர்ந்து பேசியபடி சாப்பிடுவது சற்று இசகு பிசகான காரியமாய் இருந்தது.

தன் விருந்தாளிகளை ஐந்தாம் வகுப்புப் பிள்ளைகளாய்க் கருதியவர்,

'சிந்தாமல் சாப்பிடணும்.'

'முட்டை சேர்த்துகிட்டால்ல தெம்பாய் இருக்கலாம் - வேண்டாம்னு சொல்லக் கூடாது.'

'சாதனா, ஏன் கன்னத்துல கை வைக்கறே?'

'சதீஷ், இடையே தண்ணி குடிக்காதேன்னு எத்தனை தரம் சொல்றது?' என்று இடையிடையே அதட்டியது அலுப்பூட்டியது.



தவிர கண்ணாடி பின்னே பருத்த தன் விழிகளால் தங்களை அவர் துழாவியபடி இருக்க, சங்கடமாய் நெளிந்தனர்.

உணவு சுவையாக இருந்தாலும், நிறைய உள்ளிறங்கவில்லை.

அவசரமாய்ச் சாப்பிட்டவர்கள் தட்டுக்களை எடுத்தபடி சமையலறைக்குள் போனார்கள்.

அங்கு தோசை வார்த்துக் கொண்டிருந்த கங்கம்மாவுக்கும் குறைதான்.

''அதுக்குள்ளே எழுந்தாச்சா? இப்படிக் கொறிக்கறது தான் இப்ப உள்ள பேஷனாம்மா?''

கொழுக்கட்டைக்குப் புடவை கட்டி விட்டது போன்ற உடம்பு அவளுக்கு.

''போதும்மா... நல்லாதான் சாப்பிட்டோம்.''

''இன்னும் இருவது தோசையேனும் வார்க்கணும்னு இருக்கேன் - கையலம்ப வந்துட்டீங்க... என் சமையல் பிடிக்கலையா?''

''ருசியாய் இருந்துச்சே.''

''திருப்தியாச் சாப்பிட்டா என்னைய மாதிரி உடம்பு ஊதிடுங்கற பயம் - அதானே? இப்பத்திய குழந்தைகளுக்கு குச்சி குச்சியாய் இருக்கணுங்கற ஆசை. இப்போ சினிமாவுல ஆக்ட் கொடுக்கறதுங்களும் முருங்கக்காயி மாதிரித்தான இருக்குதுங்க? அந்தக் காலத்துல தேவிகா, சாவித்ரி, ஏன் ஜெயலலிதாம்மாகூட நல்லா 'கும்'முனு நிறைஞ்சு தெரிவாங்க.''

''நீங்க நிறையப் படம் பார்ப்பீங்களா?''

''வெளியூர் போனாத்தானம்மா பார்க்க முடியும்? இப்ப இங்கன ஏதே ஷூட்டிங்கு நடக்குதாம். சீதா மாலிக்குனு ஒரு பொண்ணு ஆடுதாம். சிட்டி சொன்னான் - சிட்டி எங்க அக்கா பேரன். நம்ப சதீஷ் தம்பிக்கும் பழக்கம்...'' விளக்கினாள்.

''சிட்டி இப்ப வந்திருந்தானா?''

''ஆமப்பா.. நீ விருந்தாளிங்ககூட மொட்ட மாடியில இருக்கேங்கவும் போயிட்டான்... அந்த கீதா மாலிக் ஆட்டத்தைப் பார்க்க. பாண்ட் போட்டுட்டு ஆடுதாம். குச்சியா இருக்கதால முதல்ல அது ஆணா பொண் ணான்னே தெரியலை பாட்டின்னு சிரிக்கான். வேண்டி யது சாப்பிடணும்மா. நாளைக்குக் குடித்தனம் பண்ண, குழந்தை பெறத் தெம்பு வேணாம்?''

''எந்த ப்ரொடக்ஷன் படம் - ஹீரோ யாரு?''

நித்யா படபடத்தாள்.

''நம்ப விஜய் தம்பிதானாம் - இன்னைக்குத்தான் வருதாம்.''

''ஹைய்யோ...!''

அலறலுடன் நித்யா துள்ள, அடுக்கி வைக்கப்பட் டிருந்த எச்சில் தட்டுகள் அனைத்தும் சரிந்து விழுந்தன!

''என்ன களேபரம் அங்கே? எல்லாரும் அறைக்குப் போய்ப் படிக்கணும் - இல்ல, தூங்கணும்...''

மகாதேவன் உத்தரவு மறு அறையிலிருந்து வர, வாயைப் பொத்தியபடி மீண்டும் குதித்தாள்.

''என்னவாம்?'' கங்கம்மா அபிநயத்தால் மற்றவர் களைக் கேட்டாள்.

''இவ விஜய்யோட விசிறிங்க - தீவிரவாத டைப்!''

''எனக்கும் அந்தத் தம்பி ஆக்ட்டு பிடிக்கும். என்னா டான்சு... அதுவும் வாய்க்குள்ளே ஒரு சிரிப்பு சிரிக்கும் பாருங்க...''

''அதேதான் - அது க்ரேட்ல...?'' என்று கங்கம்மாவை இழுத்து முத்தமிட்டாள் நித்யா!

''அடக் கோராமையே... இந்தக் குதி குதிக்கீங்களேம்மா...''

கன்னத்தைத் துடைத்து வெட்கப்பட்டாள் கங்கம்மா.



''நான் உடனே போய் விஜய்யைப் பார்க்கணுமே...'' தணல் மேல் நிற்பது போலக் காலை மாற்றி மாற்றி வைத்துத் தவித்தாள் நித்யா.

''யம்மாடி அது மட்டும் இங்க ஆகாது. ஐயா யாரையும் வெளியே விட மாட்டாங்க. அவுங்களையும் குறை சொல்லக் கூடாது... கன்னிப் பொண்ணுங்க பத்திரமாய்ப் புழங்கறாப்பல இல்லையே இந்த ஊரு...''

''என்ன கடல் விரலு எங்களைப் பிடிச்சு முழுங்கிடு மாக்கும்?''

கங்கம்மாவின் முகம் தீவிரமானது.

''அந்த விஷயத்தையும் தெரிஞ்சு வச்சிருக்கீங்களா? பிறகென்ன - அதான் விஷயம்.

''அப்ப இனி கீதாமாலிக் ஊர் திரும்ப மாட்டாளாக்கும்?''

''என்னம்மா...?''

''அதான் கடல் விழுங்கிடும்றீங்களே!''

''ஊரார் பொண்ணைப் பத்தி நமக்கு என்னம்மா - நம்ப வீட்டுப் பொண்ணுங்களைப் பத்திரமாய்க் காப்பாத் தணும். தவிர... இங்கயே உள்ளவங்களைத்தான் கடலு பழி தீர்க்கும்...''

''அப்படி யாரைப் பழி வாங்கியிருக்குது?''

கங்கம்மாவின் கண்கள் கலங்கின.


பருத்த கன்னங்களில் இடுங்கிய விழிகளில் சோகம்...

''எங்கக்கா பேத்தியை முழுங்கிடுச்சேம்மா - வந்து போறானே சிட்டி -அவனுடைய அக்கா. அந்தப் புள்ள பேரு சுந்தரி. பேருக்கேத்த மாதிரி சிவப்பா, நல்லா சிங்காரிச் சுட்டு இருந்தவ... சிட்டுக் குருவி மாதிரி ஒரு துடிப்பு...''

பெண்கள் உன்னிப்பாய்க் கவனித்தனர்.

இதுவரை கட்டுக்கதை என்று எண்ணியது நிஜம்தான் என்பதைக் கேட்ட கிலி மெள்ள அவர்களைச் சுற்றி இறுக்க ஆரம்பித்தது.

## 5



முழங்கைகளைக் கீழே ஊன்றி, தவழ்ந்தும் மர அலமாரிக்குள் நுழைந்த நாலு பெண்களின் இருதயங்களில் 'ததும் ததும்' என்ற ரகசிய முழக்கம்!

''சாதனா, நீயும் நானும் அறையிலேயே இருந்துக்குவோமே! யாராவது வந்து கதவைத் தட்டி அறையில் நாம் இல்லைங்கறதைக் கண்டுபிடிச்சுட்டால்...?''

''சும்மா வாடி, பயந்தாங்கொள்ளி தீபா - அதான் அறையைப் பூட்டியாச்சே!''

''ஞானக் கொழுந்தே... கதவைத் தட்டி உள்ளேயிருந்து சத்தமே வரலைன்னாலே சந்தேகப்படுவாங்களே...''

''பயண அலுப்புல அசந்து தூங்கிட்டதாய்ச் சொல்லிட வேண்டியதுதான்...'' என்ற நித்யா முதல் ஆளாய் இறங்கப் பரபரத்தாள்!

தன் அபிமான நடிகரைத் தரிசிக்கப் போகும் பரவசம்!

''அதுக்குள்ளே நான் மதியம் சாப்பிடும் போது நாலு தரம் பெருசு பெருசாய்க் கொட்டாவி விட்டேன்.''

''சூப்பர் ஆக்ட்டா? வா போகலாம்.''

சதீஷ் அலமாரியின் பின் பலகையை அழுத்தி ஒதுக்க, அது சுலபமாய் விலகியது.

விரிந்த இருட்டு வாயை அச்சமாய்ப் பார்த்தன நாலு ஜோடி விழிகள்.

''இந்தாங்கக்கா டார்ச் - முதல்ல மூணு அடி குதிச்சா பிறகு வெறுமே நடைதான்.''

''கீழே நண்டு ஊருமோ?''

''இல்ல - முதலைதான் வாய்பிளந்து காத்திருக்குதாம். ஹீரோவைப் பார்க்க இந்தக் கஷ்டம்கூடப் படலைன்னா எப்படீங்க -அம்மணி?''

விஜய நாமாவளியுடன் துணிந்து குதித்தாள் நித்யா!



''என்னடீ ஓ.கே.யா?''

இருட்டுக்குள் விசாரித்தனர் -

''சீக்கிரம் வாங்க.''

ஒவ்வொருவராய் இறங்கி இருளுக்குக் கண்கள் பழகும் வரை துழாவி நின்று பின் வரிசையில் சதீஷைத் தொடர்ந்தனர்.

சற்றுத் தடுமாறினாலும் புது அனுபவத்தின் உற்சாகமான 15 நிமிட நடைக்குப் பின் பாதையின் விளிம்பு தெரிந்தது. 'பளீர்' என்ற சூரிய வெளிச்சம் -

'யப்பா யப்பா வந்தாச்சுப்பா.

வெளிச்சத்தப் பார்த்தாச்சுப்பா...'

ஒருத்தி ஆரம்பிக்க மற்றவர் கோஷ்டியாய் இணைந்தனர்.

''ஷ்... குனிஞ்சு மேடேறுங்க... சத்தம் வேணாம்.''

மூச்சு முட்ட மேடேறி மனசுக்குள்ளேயே உற்சாகமாய்க் கூவிக் கொண்ட போதுதான் அந்தச் சன்ன ஊளைச் சத்தம் அவர்களை மிரட்டியது.

''ஐயோ... என்ன சதீஷ் இது?''

''தெரியலியே... பக்கத்துல இருக்கறது சீலாயி மெஸ்தான்.''

''அப்படீன்னா இன்னைக்கு அங்க மீன் வறுவலுக்குப் பதிலாய் நரிப் பொரியலோ? சீலாயி அம்மணி நரியை அறுக்கறாளோ?''

''ஏய் - லாவ் -சும்மாரு. மேலெல்லாம் நடுங்குது.''

சாண் அளவிலிருந்த ஆண்பிள்ளை துணிந்து முன்னேறியிருந்தான். தைரியம் வரப் பெண்கள் சதீஷைத் தொடர்ந்தனர்.

இப்போது ஊளைச் சத்தம் மேலும் வலுத்தது.

இப்போது அது ஒரு மாதிரியான அழுகைப் புலம்பல் என்பது புரிந்தது.

''சீலாயிம்மா ஏன் இப்படி அழறாங்க...?''

''உனக்கு இவங்களைத் தெரியுமா, சாதனா?''

''முன்னே பலகாரம் செய்து வீட்டுக்கே கொண்டு தருவாங்க... ஆனா அவங்க பேத்தி காணாமல் போனதி லேருந்து வெளியே வர்றதில்லை...''

அக் காரைக் குடிசையை நெருங்கியவர்கள் தாழ்வாய்ப் பதிக்கப்பட்டிருந்த ஜன்னல் வழியே எட்டிப் பார்த்தனர்.

ஆறு ஜோடிக் கண்கள் உப்புக் காற்றின் துரு ஏறிய ஜன்னல் கம்பி வழியே உள்ளே துழாவின.

உள்ளே அதிக வெளிச்சமில்லை.

ஆனாலும் அகல் விளக்கின் பின்னே இருந்த புகைப் படம் தெளிவாய்த் தெரிந்தது. துடிப்பான இளம் பெண் ணின் படம் அது. அதில் வாசனை வளைவாய்ச் சின்னக் கதம்ப மாலை.

அப்படத்தைப் பார்த்துத்தான் கிழவி புலம்பிக் கொண் டிருந்தாள்.

பாம்படத்திற்காய் வளர்த்த காதுகள் மூளியாய் ஆடின.

''எங்கடீ போன? செத்தியா இருக்கியான்னு கூடத் தெரி யாத என்னைய அழ விட்டுட்டு ஏம்டீ போன எந்தங்கம்? ஊஊ... 'பூ வாங்கித் தா பாட்டி... புடவை வேணும்'னு என்னைய அரிச்சுப் பிடுங்குவியே... இதோ வச்சிருக் கேம்டீ... கூடவே ஸ்னோவு, பகுடரு, ஜிகினா வளைவி எல்லாம் வச்சிருக்கேன்... வாடீ கண்ணு... ஊஊ... வந்து சிங்காரிச்சுட்டு நில்லு... பணியாரத்தத் தின்னு... வாடீ... ஊஊ... கேக்குதாடீ உனக்கு? இந்தக் கிழவியோட அழுகாச்சி கேக்குதா? உம் மனசு கரையுதா...?''

குனிந்து மாரில் அடித்தபடி கேள்விகளைக் கேட்ட முதிய வள் இடையிடையே முகம் உயர்த்தி ஊளையிட்டாள்.

பார்த்த இளம் விழிகளில் ஈரம் கோர்த்தது.

ஜன்னலிலிருந்து விலகினர்.



''இதான் பாட்டியோட பேத்தியா?''

''ம்ம் - சில வருஷங்களுக்கு முன்னே காணாமல் போச்சாம்.''

''காணாமல்னா... யாரோடயாவது ஓடிப் போனாளா? இல்லை, யாரும் கடத்திட்டுப் போயிட்டாங்களா?''

''விசாரணை நடத்து, மவளே... போ.''

''சாதனா! உனக்கு ஏதும் விவரம் தெரியுமா?''

''இல்லை...நம்ப கங்கம்மாட்ட கேட்டா தெரியும்... காணலைன்னு மட்டும் பேச்சு...''

''கங்கம்மா பேத்தியும் இந்தப் பொண்ணும் சேர்ந்து எங்கேயாவது போயிருக்காங்களோ? 'நடிகரை நேரில் பார்க்கச் சென்னை வந்த இளம் அழகிகள்'ன்னு எத்தனை செய்தி வாசிக்கறோம்?''

''சென்னை போய் வேண்டாத கைகள்ல சிக்கியிருக் கலாம்...''

''ம்ப்ச்... பொண்ணுங்க இந்த விஷயத்துல கொஞ்சம் புத்தியோட நடந்தால் தேவலை!''

''பாவம்க்கா... புத்தியிருந்தால்தானே...'' அங்கலாய்ப் பாய் சதீஷ் இழுக்க, லாவண்யா அவன் காதைத் திருகினாள்.

''ஐயோம்மா...''

''ஏண்டா அத்தனைக்கா வலிச்சிருச்சு?''

அவள் காதை நீவ, குடிசைக்குள்ளிருந்து குரல் வந்தது.

''ஆரது?''

''நாந்தாம் பாட்டி.''

சதீஷ் முன்னே போக, மற்றவர்கள் தொடர்ந்தனர்.

''அட... பெரிய வூட்டுத் தம்பியா? வாப்பா - இன்னை யோட பாவிமக போயி மூணு வருஸமாச்சு... தகவலே இல்லையேப்பா... அவுகல்லாம் யாரு?''

''எங்க வீட்டுக்கு வந்த விருந்தாளிங்க பாட்டி.''

''குமரிப் பொண்ணுங்களை ஏம்ப்பா கூட்டிட்டுத் திரியறே? காலாகாலத்துல வீட்டுக்குப் போங்க.'' குரலில் பதற்றமிருந்தது.

''நீங்க செயற புட்டு பிரமாதமாய் இருக்கும்னேன்... அதான் வந்தோம்.''

''கேட்டா தந்தனுப்பியிருப்பேனே, முத்துக்களே... முத்து சிப்பிக்கு உள்ளாரத்தானே இருக்கணும்? வெளி யேறுனா அவனவன் களவாடிட்டுல்ல போயிருவான்?''

''ஆகட்டும்... இப்ப வீட்டுக்குத் திரும்பிடுவோம்... கங்கம்மா பேத்தியையும் காணலைன்னு கேள்விப் பட்டோம்.''

''அதுவும் அப்பிராணிப் பொண்ணும்மா. கடலு விரலு பத்தி அத்தனை தெரிஞ்சும்... போயி சிக்கிருச்சே.''

''அதிலேதான் மாட்டியிருப்பாங்களா, பாட்டி?''

''வேறென்னம்மா ஆவத்து இங்க? இளந்தாரிப் பயலுவ எதிரே நின்னுகூட பேசாதுங்களே...''

''வேலைக்குப் போனாங்களா?''

''முத்தாட்டம் பொத்தியில்ல வச்சிருந்தேன். அப்பப்ப முரளி சார் வூட்டுக்கு வேலையிருக்குன்னு போவா... அவரு சம்பளமா வெளிநாட்டுப் பகுடரு சோப்புன்னு தந்ததால குமரிங்க விரும்பிப் போகுமங்க...''

''அதாரு முரளி?''

சதீஷைக் கேட்டாள் மீனா.

''இங்கே நம்மதுக்கு அடுத்த பெரிய வீடு அவருடை யதுதான்... ரொம்ப காலமாய் இங்கேயே இருந்தவரு - நம்ப வீட்டையும் கூட ஜமீனிடம் இருந்து அவர்தான் வாங்கறதாய் இருந்ததாம். அதுக்குள்ளே அப்பா பேசி முடிச்சுட்டார்.''

''என்ன வேலை செய்றாரு?''



'அப்புறம் சொல்கிறேன்,' என்பதாய்ச் சைகை செய்தான், சதீஷ்.

''வரோம் பாட்டி.''

''இருங்கப்பா... இந்தப் பலகாரத்தைச் சாப்பிட்டுட்டுப் போங்க. போனவளுக்குப் பதிலாய் அஞ்சு குமரிக இன்னைக்குன்னு வந்திருக்கீங்க... எம் பேத்தி திரும்ப வரட்டும்... இல்ல, அவளுக்கு என்ன ஆனதுன்னாவது தெரியட்டும். இந்த வளைவி, சாமானுங்கள எடுத்துக் கோங்க, முத்துக்களா... எம் மனசு ஆறும்.''

தயங்காமல் பெண்கள் ஆளுக்கு ஒன்றாய்ப் பொருட் களை எடுத்துக் கொள்ள, முதியவள் அவர்களுக்குத் திருஷ்டி கழித்தாள்.

''தீர்க்காயுசாய் இருக்கணும்ப்பா - காத்து கருப்பு அண்டாம பெருவாழ்வு வாழோணும்.''

சதீஷ் முன் எச்சரிக்கையாய் வைத்திருந்த கயிற்று ஏணியில் தொத்தி மறுபடி அறைக்குள் நுழைந்தவர் களுக்கு மூச்சு வாங்கியது - நிறைய வியர்த்திருந்தனர்.

''நூதன அனுபவம்ப்பா.''

''நல்ல உடல் பயிற்சியும்தான் - நான் ஒரு கிலோ மெலிஞ்சிருப்பேன்.''

''ஆங்... வர்ற வழி முழுக்க பாட்டி தந்த பணியா ரத்தை மென்னியே - பிறகெப்படி?''

''நான் பாட்டிட்டே விசாரிச்சேன். ரெண்டு பொண்ணு களும் சிநேகிதிகள்னாலும் தனித்தனியேதான் காணாமல் போயிருக்காங்க. ஆறேழு மாச இடைவெளியிலே. தவிர கடல் விரல் அவங்களை முழுங்கலைங்கறது நிச்சயம்.''

''அதெப்படித் தெரிஞ்சுது...''

அனைவரும் ஆர்வமாய்க் கேட்டனர்.

''வீட்டுல உங்க பேத்தியோட பொருள் ஏதேனும் காணலையான்னு கேட்டேன். முதலில் தலையாட்டின

பாட்டி, பிறகு எம்பொண்ணு ஃபோட்டோ படம்தாம்மா காணலைன்னாங்க.''

''அடடே, வாவ், பாயின்டை வாவிப் பிடிச்சுட் டாளே... அதாவது தன் அம்மாவுடைய ஃபோட்டோ வுடன்தான் பொண்ணு கிளம்பியிருக்கா?''

''அதாவது போக முடிவெடுத்துக் கிளம்பியிருக்கா.''

''இனி போனது தனியாகவா, இல்லை... ஜோடி சேர்த் துட்டான்னு மோப்பம் பிடிக்கணும்.''

''அது எதுக்கு நமக்கு? கடல் விரலுங்கறது கட்டுக் கதை - அத்தோட விடு.''

''இதைப் பாட்டி போலீஸ் விசாரணையப்ப சொல்ல லியா?''

''தெரியலை. பேத்தி காணலைங்கற அதிர்ச்சியிலே பாட்டிக்கு எதையும் யோசிக்க, கோர்வையாய்ச் சொல்ல முடிஞ்சிருக்காது. ஃபோட்டோ மிஸ்ஸிங்கறதும் அப்போ தெரிஞ்சிருக்காது. அவங்க ஊளையில போலீஸ் மிரண்டு - போதும்டான்னு விட்டிருப்பாங்க.''

''ம்ம் -இப்ப கொஞ்சம் படுப்போமா? அசத்துது.''

''நேரமில்லை - டிபன் சமயம் - போய் ஒரு கப் காப்பியாவது குடிச்சாகணும்.''

''ஐயோ! வயிறு திம்முனு இருக்கே!''

''நாம போகலைன்னா அப்பா திட்டுவாங்க. அம்மா வருத்தப்படுவாங்க. முக்கியமாய் சக்கரத்துக்குச் சந் தேகம் வரும் - ஆக. வாங்க.''

வழக்கத்தை விட அதிகமாய்ச் சாப்பிட்டு விட்ட மீனா விற்குத் தூக்கம் வரவில்லை. புரண்டு புரண்டு படுத்தாள்.

அத்தனை பத்திரிகைகளும் தபால் மூலம் வரவழைக்கப் பட்டிருக்க, சிலவற்றையேனும் வாசிக்கலாம் என்ற நினைப்புடன் எழுந்தாள்.



புது அறையின் சுவிட்ச் உடனே விரலுக்குத் தட்டுப்பட வில்லை. சுவரை விரல்கள் தடவிய நேரம் விழிகள் வெளியே அலைந்தன.

அப்போதுதான் அந்த வெளிச்சத்தைப் பார்த்தாள்.

இவர்கள் வீட்டின் மொட்டை மாடியிலிருந்து பாய்ந்த வெளிச்சம்!

அணைந்து அணைந்து எரிந்தது - ஏதோ சமிக்ஞை போல்! உருவம் ஏதும் தெரியவில்லை என்றாலும் இத்தனை பிரகாசமான ஒளி அங்கு தானே வர வாய்ப் பில்லை -இப்படிச் சீராய் அணைந்து எரியவும் வழி யில்லை. ஆக, மொட்டை மாடியில் யாரோ நிற்கிறார்கள் - அங்கு என்ன நடக்கிறது?

குழப்பத்துடன் யோசித்த அதே வேளையில் அவளது அறைக்கதவை யாரோ மெள்ளச் சுரண்டினார்கள்...!

## 6



கடற்காற்று வஞ்சனையின்றி வீசியும் மீனாவிற்குக் 'குப்'பென வியர்த்தது.

உறங்கும் தோழிகளை எழுப்பலாமா?

அல்லது இழுத்துப் போர்த்திப் படுத்து விடுவதா? அசந்தர்ப்பமாய் சதீஷ் காலையில் சொன்னது நினைவிற்கு வந்தது.

'முன்னே ஒரு பாமரேனியன் நாய் வளர்த்தோம்க்கா... செத்துப் போச்சு. சக்கரம்தான் அதை விஷம் தந்து கொன்னுட்டான்னு எனக்குச் சந்தேகம்.''

'ச்சே - கொலையா... ஏன்... எதுக்கு?'

'டாமிக்கு அவனைக் கண்டாலே ஆகலையே - சக்க ரத்தைப் பார்த்ததும் பயங்கரமாய்க் குரைக்கும். ராத்திரி கூட... அதாவது சக்கரம் இங்கே ராத்திரியும் நடமாடி இருக்கணும்.'

'அவன் வீடு எங்கே?'

'ஒண்டிக்கட்டை - ஆக, அப்பா அவனுக்குச் சமைய லறை பக்கத்திலேயே ஒரு அறையைத் தந்துட்டாங்க.'

'தூக்கத்துல நடக்கும் பழக்கமாய் இருக்குமோ?'

'அப்படீன்னா நாயைக் கொல்வானேன்? அன்னைக் குன்னு சக்கரமே டாமிக்குச் சாப்பாடு கொண்டு வச்சான் -அது தொடலை. சாதனாக்காதான் 'சாப்பிடுறா'ன்னு கெஞ்சிச் சாப்பிட வச்சா - கொஞ்ச நேரத்துக்கெல்லாம் டாமிக்கு 'விலுக் விலுக்'குனு வெட்டி இழுத்துச்சு... பிறகு செத்துடுச்சு.''

'டாமி இருந்ததாலதான் நாங்க சுரங்கப் பாதையைக் கண்டுபிடிச்சதே... துணிச்சலாய் இறங்கியும் நடந் தோம்... அதுக்குள்ள குதிச்ச டாமியைத் தூக்கத்தான் நாங்க அதிலுள்ளே இறங்கினோம்.'

'ஓஹோ?'

'இன்னொரு விஷயம் தெரியுமா? ராத்திரி அறைக்கு வெளியே உள்ள நடையில் அப்பப்ப யாரோ நடக்கறது போலக் கேட்கும்! அது சக்கரமா, இல்லை, டாமியின் ஆவியான்னு தெரியலை.'

'ச்சே... நாய்க்கு ஏது ஆவியெல்லாம்?'

மறுபடி கதவு மெல்ல - மிக மெல்லத் தட்டப்பட்டது. திறந்தால் அதன் பின்னே சக்கரத்தின் உணர்ச்சியற்ற ரப்பர் முகத்தைப் பார்க்க நேரலாம் என்ற நினைப்பே இவளை உதறிக் குலுக்கியது.

''ஷ்... நான் சதீஷ்.''

வந்த குரல் மீனாவைச் சற்றுத் தேற்றியது.

தொய்ந்த கால்களை ஒரு மாதிரிச் சமாளித்து நடந்து, கதவைத் திறந்தாள். பளிச்சென்று அறைக்குள் புகுந்த சதீஷ் கதவைச் சாத்தித் தாழிட்டான். இருவரும் ஒருவித



அச்சத்துடன் மௌனமாய் ஒருவரை ஒருவர் சற்று நேரம் பார்த்திருந்தனர்.

''முழிச்சுத்தான் இருந்தீங்களா - மீனாக்கா?''

''ம்ம்...''

''வெளியே பார்த்தீங்களா?''

''ம்ம்... யாரோ சிக்னல் செய்தாங்க.''

''இதுவும் ரொம்ப நாளாய் நடக்குது! ஆனால் எனக்குத் தனியே போய் யாரு என்னன்னு பார்க்கப் பயம்.''

''நம்ப வீட்டு மேலேயிருந்துதான் - இல்லையா?''

''ஆமா. இங்கே வெளியாட்கள் நுழைய முடியாது... ஆக, இது வீட்டுல உள்ள ஒருத்தர் வேலைதான்.''

''சக்கரம் அறையைப் போய்ப் பார்த்தால்...?''

''போனேனே... அவன் கட்டில்ல படுத்திருக்கற மாதிரி தான் தெரியுது - கங்கம்மா ஷெனாய் மாதிரி இனிமையாய் குறட்டை விடறாங்க...''

''ஓஹோ?''

''துணைக்கு வர்றீங்களாக்கா - மொட்டை மாடிக்குப் போய்ப் பார்க்கலாம்.'' அச்சம் இருந்தாலும் இருவருக்கும் மேலே நிற்பது யார் என்பதை அறியும் ஆவலும் இருந்தது!

''மற்றவங்களையும் எழுப்புவோமே...''

'வேணாம் - சத்தம் அதிகமாயிடும்- நாம மட்டும் போவோம்.''

சதீஷின் பேனா டார்ச் வீசிய சன்ன ஒளியில் இருவரும் நடந்தனர்.

பூனை போலச் சத்தமில்லாத நடை.

ஒருபக்கச் சுவரை ஒட்டி ஏறிய மரப்படிகளை ஏறும் முன் சற்று நிதானித்தனர். இவர்கள் இந்த ஒடுங்கிய படியில் ஏற, மேலுள்ள நபர் இறங்கிவிட்டால் விபரீதமாகி விடுமே...

டாமியைப் போல இவர்களும் கொல்லப்பட்டால்?

இவர்கள் நடுங்கிய நேரம் மேல் கதவு மெள்ள விரிந்தது - நிலா வெளிச்சம் உப்புக் காற்றுடன் முதலில் வர, இவர்கள் இருவரும் படியின் வளைவின் கீழ்ப் பதுங்கினர்.

யாரோ கவனமாய் இறங்கும் காலடி ஓசை...

யார் என்று பார்க்க முடியவில்லை.

காலடி ஓசை தேய்ந்ததும் மெள்ளத் தலை நீட்டினார்கள்.

உருவம் அதற்குள் போய் விட்டிருந்தது.

''மேலே போய்ப் பார்ப்போமா?''

''ரைட்... வேற யாரும் மேலே இருக்கமாட்டாங்களே?''

''கதவைத் தாழ் போட்டிருக்கான்... ஆக, இருக்க வாய்ப்பில்லை.''

என்றாலும், மிருதுவாய் ஏறி மிக நாசூக்காய்த் தாழ் விலக்கி எட்டிப் பார்த்தனர்... இரவு நேரம் ஊர் மீண்டும் சற்றுப் பயங்கரமாய்த் தோன்றியது. விளையாடும் நாய்க் குட்டிகளைப்போல தூரத்தே உருண்ட வெள்ளை அலைகள். அவைகளுக்கு அப்பால் சலனமற்றிருந்த ஆழ்கடல்...

''அங்க பார்த்தியா...?''

''எது, அந்த வெளிச்சத்தைத்தானே?''

''ஆமா... படகுகள்னு நினைக்கறேன்.''

''மோட்டார் படகுகள்... ஆனா என்ஜினை அணைச் சுட்டு கரைப் பக்கமாய் வருதுங்க...''

''அதுக்கான சமிக்ஞைதான் இப்ப காட்டப்பட்டதுன்னு நினைக்கறேன்... இங்கேயிருந்து பார்த்தால் கரை முழுக்கத் தெரியுது. ஆளில்லை - ஆக, ஆபத்துமில்லை - நீங்க வரலாம்னு சிக்னல் காட்டியிருக்கணும்.''

''யாருக்கு?''

''அதுவும் புதிர்தான்... உங்க அப்பாவுக்கு இதையெல்லாம் சொல்லிடணும், சதீஷ்... அவங்களுக்குத் தெரியாம நிறைய நடக்குது உங்க வீட்டிலே... சக்கரத்தை முதல்ல வேலையை விட்டு நீக்கணும்.''



''அப்பாவுக்கு அவன் மேல ரொம்ப நம்பிக்கை. லேசில் நாங்க சொல்றதை ஏத்துக்க மாட்டார். அவரை நேரே இங்கே கூட்டிட்டு வந்து சக்கரம் சிக்னல் பண்றதைக் காட்டினாத்தான் உண்டு. டார்ச்சும் கையுமாய் அவனை மாட்டி விடணும்.''

''ஆனால் சக்கரபாணி அவன் அறையிலே படுத்திருந்தாயும் நீதானே சொன்னே...?''

''ம்ம்... குழப்பமாய்த்தான் இருக்குது. அவன் அறையிலே பெரிய கம்பியில்லாத கண்ணாடி ஜன்னல் உண்டு - அது வழியே வேற யாரும் நுழையறாங்களோ?''

''அது இப்ப திறந்திருந்ததா?''

''ம்ம்... ஞாபகமில்லையே...''

''இங்க நடக்கறது கடத்தல் வேலைன்னா, நிறையப் பணமும் வரும். பிறகேன் சக்கரபாணி இங்கே வேலை செய்யணும்.''

''நம்ப வீடுதானே இத்தனை உயரத்துல இருக்குது... இங்கே ஒரு ஆள் இருக்கட்டும்னு முரளியே கூடச் சக்கரத்தை இங்கே வேலை செய்யச் சொல்லியிருக்கலாம்.''

''இருக்கலாம். ஆக, முரளி ஏதோ குல்மால் வேலை செய்றார்... ம்ம்?''

ஓரளவு தெளிவுடன் படுக்கைக்குப் போனாலும் லேசில் உறக்கம் வரவில்லை மீனாவிற்கு. இந்த இரவும் வெகு வித்தியாசமாய்க் கழிவதை நினைத்தபடி புரண்டவள் கிழக்கு வெளுக்கும் சமயம் தூங்கலானாள்.

## 7



''ஏம்மா குழந்தை - கண் சிவந்திருக்குது?''

சற்றுக் கண்டிப்புடனேயே கேட்டார் மகாதேவ். ''வேளைக்குத் தூங்காம என்ன வேலை?''

''ம்ம்... வந்து அங்க்கிள் - படிப்புதான் - வேறென்ன?''

விடிந்த பிறகே உறங்கியவளுக்குக் காலை உணவை விடத் தூக்கம்தான் முக்கிய தேவையாய் இருந்தது.

ஆனால் விருந்தாடி வந்த இடத்தில் இஷ்டத்திற்கு இருக்க முடியாதே.

சாப்பிட்டு முடித்திருந்த மகாதேவ்,

''ஒழுங்கா சாப்பிடுங்க - பிறகு 2-3 மணி நேரம் படிப்புதான் - என்ன?'' என்ற அதட்டலுடன் நகர, இவர்களுக்கு 'அப்பாடா' என்ற நிம்மதி.

''கதைய விட்ட இடத்திலேருந்து சொல்லுடி.''

''மினுமினுன்னு லைட்டுங்க கரைய நோக்கி வந்தது. படகுக்குச் சிக்னல் செய்திருக்காங்க...''

''செய்தது யார்னு பார்க்கவே முடியலியா?''

''இல்லை - பதுங்கியிருந்தோமே...''

''சக்கரம்தான் சுழண்டிருக்கணும்...'' முனகினாள் லாவண்யா.

''ஆனால் அதைச் சுழல விட்டது வேற ஒருத்தன் - முரளிங்கறவரைப் பற்றி...''

''ஆங்... சீலாயிப் பாட்டி கூட அவரைக் குறிப்பிடலை?''

''அவருதான். அவர் கடத்தல் வேலை செய்றவராம்...''

மீனாவை இடைமறித்தாள், சாதனா -

''நிச்சயமாய் அப்படீன்னும் சொல்லிட முடியாது, மீனா. முரளி இங்கே செல்வாக்கான ஆள்.''

''சரி - எப்படி இந்தச் செல்வத்தைச் சம்பாதிச்சார்?''

சூடிகையாய்க் கேட்டான் சதீஷ்.

''சரி, சம்பாதிச்சுட்டார் இல்லை? இனியும் ஏன் முரளி தொடர்ந்து கள்ளக் கடத்தலைப் பண்ணணும்... அதுக்கென்ன அவசியம்?''



சாதனா தன் கட்சியைச் சற்று உரக்க எடுத்துச் சொல்ல, சதீஷ் மேசைக்கு அடியில் அவளை உதைத்தான்.

''டேய்... ஏண்டா?''

''சக்கரம் வருது..'' - கடித்த பற்களூடே எச்சரித்தான்.

சட்டென்று அனைவரும் மௌனமாயினர்.

சக்கரபாணி சூடான தோசைகளை வைத்து விட்டுப் போனதும், தீபாதான் மௌனத்தைக் கலைத்தாள் -

''அதான் சக்கரபாணிக்குக் காது கேட்காதில்ல - பிறகேன் இத்தனை எச்சரிக்கை?''

''வந்த மறுநாளே சொன்னாங்களே - செவிடனாய் நடிக்கறானோன்னு சந்தேகப்படறதாய்.''

''நானும் அது சரிதான்னு நினைக்கறேன் - ஏன்னா இப்ப முரளி கள்ளக்கடத்தல்காரர்னு நாம பேசினப்போ சக்கரம் முகத்துல... ஆச்சரியம்... அச்சம்னு கலவையான ஒரு உணர்ச்சி ஒரு நொடி தோன்றினது...''

''இதைப் போலத்தான் எனக்கும் ஒரு அனுபவம்!'' குரலைத் தழைத்துப் பேசினாள் சாதனா...'' அன்று அம்மா தன் நகைகளைப் பற்றிப் பேசிட்டிருந்தாங்க. அவங்க நீல ஜாகர் வைரக்கம்மலைப் பிரிச்சு, எனக்குப் பிடிச்ச மாதிரி கட்டக் கொடுக்கலாம்னு பேச்சு. மாங்காய் மாலை, ஒட்டியாணம்னு பேசப் பேச, சக்கரம் முகத்துல அப்படி ஒரு பேராசை. அவசரமாய் நான் பேச்சை மாற்றினேன்.''

''ஆனா நேற்றுச் சமையலறையில் தட்டுங்க சரிஞ்ச போது, அவன் திடுக்கிடாம கூலாய் நின்னானே?''

''இதுவும் மர்மம்தானுங்க - பட்டி மன்றமே நடத்தலாம் - சக்கரத்துக்குக் காது செயல்படுதா - படலியான்னு!''

பெண்கள் தங்கள் வீடுகளுக்குப் போன் செய்து தங்கள் நலம் பற்றித் தெரிவித்த பின்னர், மீண்டும் வெளியே போவது பற்றித் திட்டமிட்டனர்.

''மதியச் சாப்பாட்டுக்குப் பிறகுதான் கிளம்பலாம் - இப்பன்னா ஆபத்து.''

''ம்ம்...''

''ஏம் - பிள்ளைகளா - மதியத்துக்கு என்ன சமைக்க... பிடிச்சதாய்ச் சொல்லுங்க. எஞ் சமையலுதான் பிடிக்கலை போல.''

வந்து நின்றாள் கங்கம்மா.

''சும்மாவே இருக்கறதால பசியில்லம்மா - மற்றப்படி உங்க சமையல் ஏ.ஒன்.''

''நிஜமாவா?''

காவிப் பற்கள் தெரியச் சிரித்தாள்.

''ஹையோ... இந்த லேஸ் பிரம்மாதம்.''

கங்கம்மாவை நெருங்கி ரவிக்கையின் விளிம்பில் பொருத்தப் பட்டிருந்த பின்னல் வேலையை ஆராயலானாள் தீபா.

தீபாவிற்கு அமைதியான சுபாவம் - அவள் ஈடுபாடு கை வேலைகளில்தான். சுற்றிலும் கலகலவென்று சிநேகிதிகள் பேசிச் சிரிக்க, அதை ரசித்தபடி எதையேனும் பின்னிக் கொண்டிருப்பாள்.

''இது டாட்டிங், குரோஷே ஏதுமில்லையே...? நுணுக்கமான புது டிஸைன்!''

''புது மாதிரியான பழைய தினுசம்மா இது - மத்தள வேலைன்னுவாங்க. வட்டமாய்ப் பொடி ஆணியடிச்சு, அதிலே ஊடும் பாவுமாய்ப் பின்னுறது.''

''அடடே... கேள்விப்பட்டிருக்கேன், கங்கம்மா... இப்பத்தான் பார்க்கக் கிடைச்சுது. ஏறக்குறைய அழியற நிலையிலிருக்கற கலை இது.. உங்களுக்கு இதை யார் கற்றுத் தந்தா? எனக்குச் சொல்லித் தருவீங்களா?''

கங்கம்மா தலையாட்டிச் சிரித்தாள்.

''ஐய.. எங்கை கரண்டி பிடிக்கத்தாம்மா சரி. இந்த ஸ்டைலு வேலை எல்லாம் வராது. ஊருக்குள்ளே தாயும் மகளுமாய் இருக்காங்க. சட்டைக்கார வம்சம் - ரோஸியம்மா, லில்லின்னு பேரு... அவங்க செய்தது இது. ரெண்டு பேருக்குமே சமையல் வேலை ஆகாது. அதுனால நான் எப்பவாவது போய்ச் சமைச்சுத் தருவேன். சில சமயம் காசு தருவாங்க. ஒரு தரம் ஜாடி நிரம்ப ஊறுகாய் போட்டுத் தந்ததுக்காய் இந்த லேஸ் துண்டைத் தந்தாங்க. ரவிக்கையில வச்சுத் தச்சுகிட்டேன்.''



''இதைத் தொழிலாகவே செய்றாங்களா?''

''ம்ம்... பேட்டி எடுக்க ஆரம்பிச்சுட்டாங்க, அம்மிணி.''

''இல்ல லாவி - இதோட அருமை உனக்குத் தெரியலை. இதை வெளி நாட்டுக்கு அனுப்பினா ஒரு மீட்டர் வேலைக்கு ஆயிரம் ரூபாய் வரை கூடத் தருவாங்க.''

''ஆமாங்க. கேரளாவுல குரியகோஸுன்னு ஒரு அம்மா இவங்க பின்னுறதை வாங்கி ஏற்றுமதிதான் செய்றாங்க. நல்ல காசு வருது இவங்களுக்கும்...''

''நல்லது.''

அறைக்குப் போனதும் சாதனாவைப் பிடித்துக் கொண்டாள் தீபா -

''ப்ளீஸ்ம்மா - எனக்கு அவங்களைச் சந்திக்கணும் - இதைப் பின்னுற முறையைத் தெரிஞ்சுக்கணுமே!'' - கெஞ்சினாள்.

''ஆகட்டும்க்கா'' - வழக்கம் போல சதீஷ் துடிப்பாய்ப் பதில் தந்தான். ''தவிர எங்க அம்மாக்குக்கூட விதவிதமான தையல் தெரியும். அவங்க அறையில போய்ப் பாருங்க.''

அதன் பின் தீபா அங்கு நிற்கவில்லை.

சுகுணா ஆன்ட்டியின் அறையில் ஐக்கியமாகி விட்டாள்.

மதிய உணவு வரை எல்லாருக்கும் நேரம் எப்படியோ பறந்து போனது. சாப்பிடும்போது அனைவருக்குள்ளும் பரபரப்பு...

''போதும்டீ - பாயசம் எல்லாம் வேணாம் - கிளம்பு.''

நித்யா லாவண்யாவைக் கிள்ளினாள்.

''உனக்கு விஜய்யைப் பார்க்கணும்ங்கறதுக்காக நாங்க பட்டினி கிடக்கணுமா?''

''இத்தனை நேரம் மொக்கினியேடீ... இப்ப ஒவ்வொரு முந்திரிப் பருப்பாய் நொசுக்காட்டி என்ன?''

''ஷ்ஷ்... சாப்பிடும் போது பேசக்கூடாது. ரசிச்சு நிதானமாய்ச் சாப்பிட்டாத்தானே அது உடம்பிலே சேரும்?''

மகாதேவ் தன் உபதேசத்தை ஆரம்பிக்க, இவர்கள் அவசரமாய் அள்ளிப் போட்டுக் கொண்டு, எச்சில் தட்டுடன் எழுந்தனர்.

## 8



இம்முறை சுரங்கத்துள் இறங்குவது சற்று இலகுவாய் இருந்தது.

பயமின்றிக் கால்களை எட்டி வைத்தனர். விரைவில் பாறை வாசல் வழியே கடலின் இரைச்சலும் சூரிய வெளிச்சமும் கிடைத்தன.

''வேடிக்கையைப் பார்த்தியா - கடலுக்கு இவ்வளவு பக்கத்துல இருந்தும் நாம கடல் மண்ணுல நடக்கலை... அலையில் பாதம் நனைக்கலை.''

''அதான் எக்கச்சக்கமாய்ப் பயங்காட்டி வச்சிருக்காங்களே - அதிலும் குதிக்கற அலை, ரவையாட்டம் மணல்னு இல்லாம இந்தக் கடற்கரையும் ஒரு தினுசாய்த்தானே இருக்குது...?''

''சரி. இப்ப முதல்ல ஷூட்டிங் நடக்கற இடத்துக்கு...''

துடித்தாள் நித்யா.

''ரோஸியம்மா வீட்டைக் காட்டினால்கூடப் போதும், சதீஷ்... நானே போய்க்கறேன்.''



தீபா கெஞ்சினாள்.

''எனக்குச் சீலாயி பாட்டிட்ட இன்னும் கொஞ்சம் பேசித் தகவல் சேர்க்கணும்.''

தீவிரமாய்ச் சொன்னாள் மீனா.

''எனக்கந்தப் பலகாரம் மட்டும் போதும்.''

''சிட்டியைப் பார்த்து, விளையாடிக் கொள்ளை நாளாச்சு.''

சதீஷ் மறுபக்கமாய் இழுத்தான்.

''டேய்.. விருந்தாளிங்களுக்குத்தான் முதல் உரிமை. ஆக, வேற வழியிலே சீலாயி வீட்டுல பார்த்துப் பேசின பிறகு ரோஸியம்மா வீடு. பிறகு வேணுமானால் நீ நித்யாவோடு சிட்டியையும் கூட்டிட்டு ஷூட்டிங் ஸ்பாட்டுக்குப் போ.''

சாதனா வியூகம் அமைத்துத் தர, அனைவரும் பீடு நடை போட்டனர்.

சீலாயியின் வீடு பூட்டிக் கிடந்தது.

''ஒரு வேளை ஷூட்டிங் பார்க்கப் போயிருப்பாங்களோ?''

மோவாயில் விரல் வைத்து உரக்க யோசித்தாள், நித்யா.

''ஆமாம்டீ... பாட்டியைத்தான் டூயட்டுக்கு ஜோடியாய் ஆடக் கூப்பிட்டிருக்காங்களாம்.''

''அப்ப அடுத்தபடி பூக்களின் வீடு!''

''அதென்ன?''

''லில்லி, ரோஸ்!'' - கண் சிமிட்டினான் சதீஷ்.

அந்த வீடு வித்தியாசமாய்த்தான் தெரிந்தது - சுவர்களைக் கொடி ரோஜா படர்ந்து மூடியிருந்தது. ஆனாலும் முன்னிருந்த தோட்டம் தாறுமாறாய்க் கிடந்தது.

''நீங்க இவங்களை முன்பு பார்த்ததுண்டா?''

''ம்ஹூம்...'' - உதடு பிதுக்கினாள் சாதனா.

''அம்மாவுக்கு ஒருவேளை தெரிஞ்சிருக்கக் கூடும்க்கா.''

கதவைத் தட்டினார்கள்.

உப்புக் காற்றினால் பெயின்ட் உரிந்த புராதனக் கதவு.

சற்று நேரத்தில் கதவைத் திறந்து காட்சி தந்த முகமும் பழமையானதுதான்.

மிருதுவான தோல் சுருக்கங்களும் பஞ்சுக் கேசமுமான முகம்.

தங்க பிரேமிட்ட கண்ணாடிக்குள்ளிருந்த கண்கள் வந்திருந்தவர்களை ஆர்வமுடன் பார்த்தன.

''எங்களையா பார்க்க வந்தது?''

புன்னகையுடன் விசாரித்தாள் ரோஸி.

ஆங்கிலச் சாயலில் பேசப்பட்ட மழலைத் தமிழ்.

''ஆமாம்மா... நீங்கதானே ரோஸிம்மா?''

''யெஸ் - நீங்க?''

''நான் எழுத்தாளர் மகாதேவுடைய மகள் - இவன் எந்தம்பி - இவங்க எங்க வீட்டுக்கு வந்த விருந்தாளிங்க.''

''வெல்கம்.''

முதியவள் உள்ளே நகர, இவர்களும் வீட்டுள் நுழைந்தனர். பெரிய ஜன்னல்கள் மூலம் வீட்டை வெளிச்சம் நிரப்பியிருந்தது. கிடந்த ஒவ்வொரு மேசை, நாற்காலியிலும் வெவ்வேறு விதமான தையல், பின்னல் ரகங்கள் விரிக்கப்பட்டிருந்தன.

''ஐயோ...'' மகிழ்ந்த தீபா, அவற்றையும் கங்கம்மாவின் ரவிக்கையிலிருந்த லேஸையும் சிலாகிக்க, பேச்சு சரளமானது.

''லில்லி... இங்க வா - நமக்கு இளமையான விருந்தாளிங்க வந்திருக்கு.'' ரோஸிம்மா அழைக்க, சற்று நேரத்தில் வெளியே வந்த பெண் லில்லி மலரைப் போலவே இருந்தாள்.

அத்தனை வெள்ளை நிறம் - மெல்லிய தேக வாகு.



கல்யாணத்தன்று சூடிய மாலை மூன்றாம் நாள் கதவு மேலே சற்று வாடித் தொங்குமே... அது போல நாற்பதைத் தாண்டிவிட்ட சற்று வாடின தேகம்.

''நம்ப பின்ற லேஸைப் பார்க்க வந்திருக்கு, லில்லி.''

''குறிப்பாய் மத்தள லேஸுங்க. மற்ற வகைகள் எனக்கும் ஓரளவு தெரியும். போட்டுப் பரிசும் கூட வாங்கியிருக்கேன். ரொம்ப ஆர்வமுண்டு.''

''நல்லது - உள்ளே வந்து பாரு.''

தீபா போய்விட, மற்றவர்கள் ரோஸிம்மாவுடன் உட்கார்ந்து அளவளாவினர். ஆங்கில முறையில் கெட்டில் தேநீர் பரிமாறப்பட்டது.

பருகியபடி பேச்சைக் கடல் விரல்களுக்குக் கொண்டு வந்தார்கள் பெண்கள்.

''இங்கேயே இத்தனை காலமாய் இருக்கும் உங்களை எப்படீங்க கடல் விரல் விட்டு வச்சுது? நீங்க வயசு நாள்ல ரோஜா மாதிரியே இருந்திருப்பீங்க... உங்க மகள் இன்னுமே லில்லிப் பூதான்.''

முதியவள் மிருதுவாய்ப் புன்னகைத்தாள்..

சற்று நேரம் யோசனையில் அமிழ்ந்தாள். பிறகு,

''கடல் விரல்கள் நம்மைத் தேடி வராது, கெர்ல்ஸ்... நாம அதைத் தேடிப் போனாத்தான் டேஞ்சர்!'' என்றாள்.

''அப்படீன்னா சுந்தரி, மற்றப் பெண்கள் எல்லாம் தாங்களாய்ப் போய்த்தான் சிக்கிட்டாங்களா?''

''ஆமாம்.''

''அப்படீன்னா கடல் முழுங்குன்றீங்களா?''

அச்சத்துடன் கேட்டாள் நித்யா.

''இவங்க அதுக்கு ரெடியாய்ப் போய் இருந்தாங்களே... அதான். உழைக்க விரும்பியிருந்துச்சு, அந்தப் பொண்ணுங்களுக்குப் பாவம் இந்த நிலைமை வந்திருக்காது - எத்தினி

வாட்டி தையல், பின்னல் வேலை கத்துத் தருதுன்னு அதுங்களைக் கூப்பிடேன்... எங்க வேலை அத்தினி வெளிநாடுங்களுக்குப் போகுது - கை நிறையக் காசும் வருது. உக்கார்ந்தே நிறையச் சம்பாதிக்கலாம்... ஆனா அந்தப் பொண்ணுங்களுக்கு ஊரு உலகம் சுத்த ஆசை... அதான் கடல் அவுங்களைக் கூட்டிட்டுப் போயிருச்சு.''

''அப்ப திரும்ப வருவாங்களா?''

முழுக்கப் புரியாமலேயே கேள்வி கேட்டார்கள்.

''பொண்ணுங்க போறது சுலபம்... திரும்பறது ரொம்பக் கஷ்டம்.''

''நேரமாச்சு... நாம கிளம்பணும்.''

சாதனா எச்சரிக்க, பெண்கள் கிளம்பினர்

''ரோஸிம்மா சொன்னது சரியாய்ப் புரியலியே - காணாமல் போனவங்களைக் கடல்தான் முழுங்குச்சுன் றாங்க.. ஆனா அதுக்குக் காரணம் அந்தப் பெண்கள் தான்னும் சொல்றாங்க!''

''ஷ்ஷ்...''

சதீஷ் அவசரமாய் அவர்களை அடக்கியபடி சுட்டிக் காட்டிய இடம் பக்கமாய்த் திரும்பினார்கள் -

இவர்களை நோக்கி வந்து கொண்டிருந்தான் சக்கரபாணி!

## 9



சதீஷ் இரண்டாய் மடிந்து ஒரு கொத்துப் பாறைகளின் பின்னே மின்னலாய் மறைய, மற்றவர்களும் அப்படியே தலைமறை வானார்கள்.

''செத்தோம் - அப்பாட்ட வத்தி வச்சிருவான்.''

ஆனல் ஐந்தாம் நிமிடம்போல ஆமைகள் போலத் தலை நீட்டி அவர்கள் பார்த்தபோது சக்கரபாணி மறைந்தே போயிருந்தான்.



''சக்கரம் எங்கப்பா உருண்டு போச்சு?''

''அப்படீன்னா அவன் நம்மைப் பார்க்கலை போல.''

நிம்மதியாய் மூச்சு விட்டார்கள்.

''அவனும் வேறேதும் பாறைக்குப் பின்னே ஒளிஞ் சிருக்கானோ என்னவோ?''

''ஐயோ... அங்கே பாரு...''

பார்த்த திசையில் சக்கரபாணி ஒரு வீட்டின் வெளிக் கதவைத் திறந்து நுழைந்து கொண்டிருந்தான்.

''ஆக அவன் நம்மைக் கவனிக்கலை.''

''ஐயோ! ஏதோ யோசனையிலே இருந்திருக்கணும் - அது யாருடைய வீடு, சதீஷ்?''

''முரளி... முரளிதரன் வீடு.''

தப்பினோம் என்ற ஆசுவாசம் போய் அனைவரிடமும் புது மும்முரம் வந்து சேர்ந்தது. விஜய்யைப் பார்க்காத சோகம் கூட நித்யா முகத்தில் இல்லை.

''நாமும் அங்கே போய்ப் பார்ப்பமே?''

''என்னத்தைப் பார்க்கறது?''

''சக்கரம் போய் யாரைப் பார்க்கறான் - என்ன பேசறான்னு...''

''இப்படி வேவு பார்க்கறது சரியில்லைன்னு படுது.''

தீபா தயங்கினாள்.

''சக்கரம் நம்ப வீட்டிலேருந்து சிக்னல் பண்ணி னான்றதை மறந்துடாதே. அதற்கான காரணம் நமக்குப் புரிய வேணாமா?''

''சரி. ஆனா போய் நாம சிக்கலில் மாட்டிக்கக் கூடாது.''

''உண்மைதான் - இப்படித்தான் மற்றப் பெண்களும் போய் மாட்டி... அதாவது அவங்களை மடக்கினது கடல் இல்லை... இந்த முரளிதரன்தானோ?''

பம்மிப் பதுங்கி வீட்டின் வெளி வாசலை அடைந்திருந்தார்கள். வெளியே காவலுக்கு யாரும் நிற்கவில்லை.

ஆக மிக மெள்ள அந்த இரும்புக் கேட்டை வாய் திறக்கப் பண்ணித் திருட்டுப் பூனைகளாய் நுழைந்தனர். மரங்கள், மலர்கள் என்று வீட்டுக்காரர் மெனக்கெடாததில் உள்ளே முள்புதர்கள் மட்டும் நிரம்பியிருந்தன. சில அடி தூரத்தில் வீடு - குனிந்து புதர்களைக் கேடயமாக்கியபடி வீட்டை நெருங்கியவர்கள் ஒரு ஜன்னலை ஒண்டினர். அந்த ஜன்னலை மறைத்தபடி மண்டியிருந்த புதரில் புதைந்தபடி எட்டிப் பார்க்கலாயினர் - முள்செடி குத்தியது, கீறியது என்றாலும் கூட யாரும் முனகவுமில்லை.

ஆனால் ஆர்வத்துடன் பார்த்த ஜன்னலின் கண்ணாடி வழியே தெரிந்தது, ஒரு இருண்ட தாழ்வாரம்தான்.

பத்து நிமிடங்கள் காத்திருந்த பின் ஏமாற்றத்துடன் இனித் திரும்ப வேண்டியதுதான் என்று முடிவெடுத்த சமயம், தாழ்வாரத்தின் அப்பாலிருந்த ஒரு அறைக் கதவு திறந்தது. அதன் வழியே பாய்ந்த மஞ்சள் விளக்கின் மங்கல் ஒளியில் இரு உருவங்கள் நிழலாய்த் தெரிந்தன.

அதில் ஒன்று நிச்சயம் சக்கரபாணி.

யாருமே அசைய, ஏன் - மூச்சு விடவும் துணியவில்லை.

தள்ளியிருந்ததால் அவர்களது அசைவு மட்டுமே தெரிந்தது.

உதடுகள் அசைவது கொண்டு இருவரும் பேசுகிறார்கள் என்பதும் புரிந்தது. சதீஷ் மெள்ள ஜன்னலை நெம்ப முயன்றான் - அது சற்று அசைந்து கொடுக்க, மேலும் மும்முரமானான்.

லாவண்யா பதிலுக்கு சதீஷின் தோளைச் சுரண்டினாள்.

''ஷ்... என்னக்கா?''

''உன் சந்தேகம் சரிதான்...''

''என்ன?''



''சக்கரத்துக்குக் காது கேட்குது.''

மற்றவர்களும் உன்னிப்பாய்க் கவனிக்கலானார்கள் -

''சாதாரணக் குரல்லதான் முரளிதர் பேசறார். ஏதும் சைகையும் செய்யலை - ஆனாலும் சக்கரம் உடனே பதில் சொல்றானே... அப்படீன்னா...''

''ஐயாக்குக் காது அப்பப்ப கேட்கும் போல.'' உள்ளே பேசியவர்கள் மெள்ள இவர்கள் புறமாய் நடக்க, இவர்கள் அமைதியாகிப் புதருக்குள் அமுங்கினர்.

சதீஷின் முயற்சியால் வாய் பிளந்திருந்த ஜன்னலின் வழியே பேச்சு இவர்களை எட்டியது.

'நேத்து வந்த கோக்கை இங்க ஸ்டாக் பண்ணிட்டேன்.'

'இனி நம்ப சரக்கை ஏற்றி விடணுமே?'

'நீதான் பார்த்துட்டு இன்னும் ஒரு மாசம் ஆகும்னியே?''

'இப்பத்தான் புதைச்சோம்... ரெண்டு மாசம் கழிஞ்சாத்தான் அது நமக்கு ஏத்தாற்போல மாறும்.''

புதரின் பின்னே மூச்சை இழுத்துப் பிடித்தபடி கவனித்தனர்.

''தோண்டிப் பாரேன்... நம்ப மண்ணு விசேஷம்ல? இப்போது பணம் தேவைப்படுது...''

''அடிக்கடி எடுத்துப் பார்த்தால் நல்லதில்லை.''

''ஊறுகாய் மாதிரி ஊறட்டுங்கற?''

கேட்டவர்களின் பிடரியில் பூரான் ஊர்ந்தது போன்ற நமைச்சல்!

''வரேன் சார் - இனி வீட்ல வேலையிருக்கும் - என்னைத் தேடுவாங்க.'

இருவரும் விலகிப் போக, இவர்களும் அவசரமாய்க் கிளம்பினர் - தங்களை ஊறுகாய் போட யாரோ பிடிக்க வரும் தினுசிலான ஓட்டம்!

சரிவில் சறுக்கலாய் இறங்கிச் சுரங்கத்தினுள் நுழைந்த பிறகுதான் சற்றுப் பீதி அடங்கி மூச்சு மீண்டது.

''சீக்கிரம்... சக்கரம் நம்மைப் பார்த்துட்டான்னு நினைக்கறேன்.''

சதீஷ் முடுக்க, வேகமெடுத்தார்கள்.

கயிற்று ஏணியில் தொத்தி அலமாரி வழியே அறைக்குள் நுழைந்தவர்களுக்கு அடுத்த அதிர்ச்சி காத்திருந்தது.

''யம்மா... என்னாச்சு... திறங்க...''

என்று இவர்களது அறைக் கதவு பதட்டத்துடன் தட்டப்பட்டுக் கொண்டிருந்தது - சாதனா விரைந்து செயல்பட்டாள் -

''ரெண்டு பேர் குளியலறையில் தண்ணி திறந்து விட்டு துணி துவைக்கறது போல பாவ்லா காட்டுங்க.''

''நாங்க தூங்கறோம்...'' மற்றவர்கள் சோபாவிலும் படுக்கையிலுமாய் முடங்க, தூங்கி அப்போதுதான் முழித்தவளாய்க் கதவைத் திறந்தாள் சாதனா.

''என்னம்மா... இம்புட்டு நேரமாத் தட்டறேன் - கதவை இடிக்கறேன் - 'தோ வரேன்'னு ஒரு சத்தம் கூடக் கொடுக்கலியே... என்னாச்சு?''

''நல்ல உறக்கம், கங்கம்மா... ரெண்டு பேர் துவைக்கறாங்களா... தண்ணிச் சத்தம் வேற...''

''தம்பி அறைக்குள்ளே எல்லாரும் வந்து அடைஞ்சுட்டீங்களா?''

''ம்ம்... இங்கே சீட்டு விளையாட வந்தோம் - அப்படியே இருந்துட்டோம் - இது பெரிய அறையில்லையா?''

''காபி நேரமாச்சேம்மா - ஐயா வேற பிள்ளைகளை உடனே வரச் சொல்லுன்னு என்னைய நிமிண்டுறாரு.''



''ஏன் சக்கரபாணி எங்கே?''

அப்பாவி போலக் கேட்டாள் சாதனா.

''தோ வரேன்னு போனவனை இன்னும் காண்கலை. பக்கோடா போட்டிருக்கேன் - சாப்பிட வாங்க. இம்புட்டு நேரமாய் கதவைத் தட்டிச் சத்தமே இல்லைங்கவும் ஐயாட்ட சொல்லிடணும்னு கிளம்ப இருந்தப்ப நல்ல வேளை திறந்துட்டீங்க - திகீர்னு போச்சு.''

கங்கம்மா கிளம்ப, பெண்கள் முகம் கழுவித் தோற்றத்தை ஓரளவு சீராக்கிக் கொண்டு, சாப்பாட்டு அறைக்குள் வந்தார்கள் -

அத்தனை பேருக்கும் காபி அவசியமாயிருந்தது -

பக்கோடா தட்டும் நிமிஷத்தில் காலியானது! வழக்கமாய்ப் பரீட்சையில் தோற்கும் மாணவன் வெற்றி பெற்றால் ஆசிரியர் பாராட்டும் தினுசில் தலையாட்டினார் மகாதேவ்.

''ம்ம்... இப்படித்தான் சாப்பிடணும். நாளைக்கு உங்க அப்பா வரும்போது நீங்க சாப்பிடறதைப் பார்த்துத் திருப்திப் படணும்.''

''அங்கிள், அப்பா வர்றாங்களா? அம்மாவுந்தானே?''

உற்சாகமானாள், மீனா.

''இல்லை. உங்க அம்மாவுக்கு வீட்டு ரிப்பேரை மேற்பார்வை இட வேண்டியிருக்காம் - அப்பாவுக்கு என்னோடு வேலை இருக்கறதால்.. அதோடு நீங்களும் இங்கே இருப்பதால் வர்றார்.''


''ஓ?''

அறைக்குத் திரும்பிய நித்யா குஷியாய்ச் சொன்னாள் -

''உங்கப்பா இங்கே வந்துட்டால் பிரச்சினையில்லை மீனு. அவர் அனுமதியோட நாம் ஷூட்டிங் பார்க்கக் கிளம்பிடலாம்.''

பிரச்சினை மேலும் தீவிரமாகப் போவதை அறியாமல் குதித்தனர்.

## 10



தட்டப்பட்ட கதவைத் திறந்தவர்களுக்கு அதிர்ச்சி!

கதவின் பின் நின்றவன் சக்கரபாணி என்பதால் மட்டுமல்ல, அவனது முகத் திரை கிழிந்திருந்ததும்தான் காரணம்.

வழக்கமான உணர்சசியற்ற ரப்பர் முகம் இன்றில்லை - அதில் குரோதமும் கோபமும் தெரிந்தன!

தாங்கள் அவனைத் தொடர்ந்ததைக் கண்டு விட்டான். மேலும் வேறென்ன பார்த்தார்களோ, தெரிந்து கொண்டார்களோ என்ற கொதிப்பு..!

புரிந்து கொண்டவர்கள் பதிலுக்கு அவனை முறைத்தார்கள்!

''சதீஷ் அறையிலுள்ள உங்க சாமான்களை எல்லாம் வெளியே எடுக்கணும் - தனியே எடுத்து வைங்க.''

வழக்கமான உணர்ச்சியற்ற குரலில் சொல்ல முயற்சித்தாலும், தொனியில் வெற்றியும் வெறியின் எக்களிப்பும் கேட்டன.

''என்ன விளையாட்டு இது?''

சாதனா அமரிக்கையான குரலில் கேட்டாள்.

இனி உரக்கப் பேசும், அபிநயிக்கும் சிரமமெல்லாம் எதற்கு என்ற எண்ணம் அவளுக்கு.

சக்கரத்திற்கும் அதே போலத் தோன்றியிருக்க வேணும். அலட்சியமாய்ப் பதிலளித்தான்.

''ஐயாவோட உத்தரவு.''

''எது, விருந்தாளிகளை வெளியேற்றணும்னா?'' சதீஷ் பொருமினான்.

''வர்ற விஞ்ஞானி சாருக்கு வசதியான அறையாய்த் தரணும்னா... இதைத்தான் தரணும் - தம்பிக்கு மறு பக்கத்தில் அறையைத் தயார்ப் பண்ணிட்டேன்.'



''ஏன்... அதை எங்க அப்பாவுக்குத் தரலாமே?''

கேட்ட மீனாவைத் துச்சமாய்ப் பார்த்தான்.

''எழுத, பரிசோதனைகள் செய்யப் பெரிய மேசை தேவைன்னு சொன்னாராம் - அது இங்கேதானே இருக்குது?''

இவர்கள் கேள்விகளுக்குத் தான் இனியும் விளக்கங்கள் சொல்லத் தேவை இல்லை என்பது போல-

''இன்னும் பத்து நிமிஷத்துல வரேன். உங்களுக்கு வேண்டியதை எடுத்துக்கிட்டு அறையை ஒழிச்சு வைங்க!'' என்றவன் போய்விட்டான்.

''சக்கரத்தின் முகத்தைப் பார்த்தியா?''

''பேச்சைக் கவனிச்சியா? செவிட்டு நாடகத்தை விட்டுட்டான்.''

''ஆனா புது நாடகத்தை ஆரம்பிச்சுட்டான். நம்மை இங்கேருந்து கிளப்பறானே!''

''சுரங்கப் பாதையின் வழி இங்கேதான் இருக்குன்றதைக் கண்டு பிடிச்சுட்டான்.''

''நம்மை இனி வெளியே விடக் கூடாதுங்கற திட்டம்.''

''ஆனா அவன் இனி இது வழியே வரக்கூடிய ஆபத்திருக்குதே...!''

''அப்படீன்னா உடனே உங்கப்பாட்ட போய் எல்லாத்தையும் சொல்லிடலாம், சாதனா...''

''அவர் நம்ப மாட்டார்... விஷயத்தைக் காது கொடுத்துக் கேட்பாராங்கறதே சந்தேகம்... அவருக்கு அவன் மேல அத்தனை நம்பிக்கை - அப்படி ஏமாற்றி வச்சிருக்கான்.''

''ஓஹோ...''

''ஒருவேளை எழுத்தாளர்க்கும் இந்த மர்ம நடவடிக்கைகளில் ஒரு கை இருக்குமோ?' என்ற சந்தேகம் 4

விருந்தாளிக்குள்ளும் தோன்றியது. அதை அமுக்கி அடக்கினர்.

''முதல்ல ஒரு வார்த்தை உங்கப்பாவிடம் நாம் நிஜமாய் அறையை மாற்றணுமான்னு கேட்டிருவோம்.''

''கேட்கறதில் தப்பில்லை. ஆனால்...''

மகனும் மகளும் இழுத்தனர்.

அவர்கள் இருவரையும் விடாமல் இழுத்துக் கொண்டு போய் மகாதேவனிடம் கேட்டதற்குப் பயனில்லாமல் போனது.

அவர் கோபத்தில் 'காச்மூச்'சென இரைந்ததுதான் பலன். மௌனமாய் மாடியின் மறுகோடி அறைக்கு மாறினர் - பக்கத்து அறையில் பெண்கள் இருந்தால் தொந்தரவு என்று ஒட்டு மொத்தமாய் மூட்டை கட்டப் பட்டனர்.

புது அறை மசமசப்பு நெடியுடன் இருந்தது.

ஜன்னல் வழியே தெரிந்த உலகம் அத்தனை வசீகரமாய் இல்லை.

''அப்ப நான் விஜய்யைப் பார்க்க முடியாதா? ஒரே ஊரிலே இவ்..ளவு பக்கத்துல இருந்தும்...''

பெருமூச்செறிந்தாள் நித்யா.

''வரப் போறது மீனாக்கா அப்பாதானே? நாம தொந்தரவு பண்ணாமல் உள்ளே போய் அப்படியே நைசா...''

சதீஷ் சொல்ல, மீனா பலக்கத் தலையசைத்தாள்.

''அப்பாவின் அறை பெரும்பாலும் பூட்டியே இருக்கும். மேசை முழுக்கக் கோப்புகள் குப்பிகள்னு இறைஞ்சு கிடக்கும் - யாரும் உள்ளே வருவது அவருக்குப் பிடிக்காது...''

அனைவர் முகங்களும் வாடின.

★ ★ ★

நித்யாவிற்குக் கதவைத் தட்டும் துணிவில்லை.



ஆனாலும் கதவு சற்றுத் திறந்திருந்தது கண்டு துணிந்து உள்ளே எட்டிப் பார்த்தாள். ஏறக்குறைய நள்ளிரவு.

அறைக்குள் விளக்குகள் பிரகாசமாய் எரிந்து கொண்டிருந்தன - வந்த கோவர்த்தனம், மகள் மீனாவிடம் கூடச் சில நிமிடங்களே பேசிவிட்டு, மகாதேவுடன் தனியே போய் விட்டார் - பின் இந்த அறைக்குள் அடைந்து விட்டவர்... இன்னும் ஆராய்ச்சியில் மும்முரமாய் இருக்கிறாரோ?

அப்படி என்னதான் ஆராய்ச்சி?

உள்ளே கோவர்த்தனம் சோபாவில் படுத்துச் சன்னமாய்க் குறட்டை விட்டுக் கொண்டிருந்தார்!

சுற்றிலும் அறை களேபரத்தில் இருந்தது.

அதைப் பொருட்படுத்தாத நித்யாவின் பார்வை சுரங்கப் பாதையுள்ள அலமாரியில் நிலைத்தது.

அதற்குள் இருக்கும் சறுக்குக் கட்டையை இழுத்தால் போதும்... ஆனால் பிறர் துணையின்றி இந்த இருட்டில் சுரங்கத்துக்குள் போக, நடக்க முடியுமா? அச்சத்தில் அவளுக்கு வியர்த்தது.

ஆனால் பயம் பார்த்தால் ஹீரோவைப் பார்ப்பதெப்படி?

கடல் விரல்கள் வேறு ஞாபகத்திற்கு வந்து மிரட்டின. நள்ளிரவில் அவற்றைப் பார்த்தால் குலை நடுங்குமே. ஆனால் விஜய்யின் சிரிப்பும் நடன அசைவுகளும் பயத்தை விரட்டி ஆசையை விதைத்தன. இரவு முழுக்கப் படப்பிடிப்பு நடப்பதாய்த் தகவல் வந்திருந்தது.

மெள்ள அறைக்குள் நுழைந்தவள் அலமாரியை நெருங்கினாள்.

மீனாவின் அப்பா இப்போது எழுந்து விட்டால் பிரச்சனைதான்.

'ஏனம்மா இங்கே?' என்று அந்த அறிவுஜீவி கேட்டால்,

''சினிமா நாயகனைப் பார்க்கப் புறப்பட்டிருக்கேன்!' என்று சொல்ல முடியுமா?

கஷ்டம்... அவருக்கு அதெல்லாம் புரியாது.

ஆகப் பூனையாய் நடந்தாள்.

பூப்போல அலமாரியின் கைப் பிடித்து இழுத்தாள் -

அதுவும் பூ மலருவது போலத்தான் விரிந்தது -

ஆனால் நித்யா விக்கித்து நின்றாள் -

அலமாரியின் கீழ்ப் பகுதி இவள் குனிந்து இழுக்க வேண்டிய அவசியமின்றிச் சுரங்கப் பாதையின் வாசலைத் திறந்தே வைத்திருந்தது!

துணிச்சலைத் திரட்டி அதனுள்ளே அவள் இறங்க ஆயத்தமான போது மேலும் அதிர்ச்சி...

சுரங்கப் பாதைக்குள் மெல்லியதாய் வெளிச்சத்தின் அசைவு! மிக மெல்லியதான குரல்கள்.

நித்யா பின் வாங்கினாள்.

துடித்த இதயத்தை அழுந்தப் பிடித்தபடி, அலமாரியின் மறுபக்கம் போய் மறைவாய் நின்றாள் -

தானும் ஒரு மரச் சாமான் ஆகிவிட்டது போன்ற மரமரத்த உணர்வு. மூச்சு மட்டும் யாரோ அவளின் உள்ளிருந்து பலக்க விசிறுவது போலச் சீற்றமாய் வெளியேறியது.

மிக மெல்லிய அசைவுகள்தான் - ஆனால் அறைக்குள் வேறு ஒருவர் நுழைந்து விட்டதை உணர முடிந்தது.

அறையினுள் விளக்குகள் எரிந்ததால் உள்ளே இருப்பவர் விழித்திருக்கிறார் என்ற எச்சரிக்கையுடன் நுழைந்த நபர், விஞ்ஞானி அசந்த தூக்கத்திலிருப்பதைக் கண்டு சற்றுத் தளர்ந்தான் போலும்...

விரைவாய் எட்டுக்களை வைத்துக் கட்டிலை நெருங்கி...

கேட்ட சப்தங்கள் நித்யாவை உலுக்கின.



என்ன நடக்கப் போகிறது - கொலையா?

மீனாவின் அப்பாவைச் சக்கரபாணி கொல்லப் போகிறானோ?

மீனா அம்மாவின் பாசமும் சிரிப்பும் நினைவு வந்து அவளை உந்தின. பதட்டம், பயத்தை மீறித் தன் மறைவிடத்தை விட்டு வெளியே வந்தாள் -

அங்கு நின்றது சக்கரபாணியில்லை...

கையில் கத்தியோ துப்பாக்கியோ இல்லை.

துணிச் சுருள் மட்டும்தான்... ஒரு விநோத நெடி அறையில் சுழன்றது.

''நீ... நீங்க... எதுக்கு இங்கே..?''

அவள் கேட்க, அந்த நெடியடித்த துணி இவள் முகத்தில் வைத்து அழுத்தப்பட்டது.

''விடு... விடு...'' என்றபடி தொய்ந்து சரிந்தாள்.

## 11



பாலையும் நீரையும் இரு அடுப்புகளில் ஏற்றி விட்டுத் தலைமுடியை நீவிச் சிக்கெடுக்கலானாள் கங்கம்மா.

நீல நெருப்பைப் பார்த்தபடி அமர்ந்திருக்கும் இந்த அதிகாலை அமைதி அவளுக்குப் பிடிக்கும்.

சீவிய கூந்தலைக் கோடாலி முடிச்சாக்குவதற்கும் பால் பொங்க ஆரம்பிப்பதற்கும் கச்சிதமாய் இருந்தது.

அடுப்பைக் குறைத்து விட்டு, குமிழிட ஆரம்பித்த வெந்நீரைக் காபிக்காக ஊற்றினாள்... சற்றைக்கெல்லாம் 'கமகம'ப்பாகக் காபி வாசனை பரவ ஆரம்பித்தது.

காபியைப் பதனமாய்ப் பால், சர்க்கரையுடன் கலந்து வைத்தாள். உறங்கி எழுந்ததும் எல்லாரும் ஆவலாய் எதிர்பார்க்கும் காபியைத் தான் பிரமாதமாய்த் தயாரித்து வழங்குவது பற்றி அவளுக்குப் பெருமையும் கூட.

முதல் டிகாக்ஷனை முதலாளி குடும்பத்தாருக்காக வைத்தவள், மறு ஈட்டிற்கான வெந்நீரை ஊற்றினாள்.

வாசல் கூட்டும் பெண் இன்னும் சற்று நேரத்தில் இளித்தபடி காபிக்காக வருவாள். சக்கரபாணியும் தன் பெரிய வெண்கல லோட்டாவுடன் சட்டமாய் வந்து நிற்பான்.

அப்போதுதான் கங்கம்மாவுக்கு நேற்றுத் தங்க வந் திருந்த புது விருந்தினரின் ஞாபகம் வந்தது. நேற்றிரவு கேட்டிருந்தார் -

'காலை காபி எப்ப தயாராகும்?'

'ஆறுக்கெல்லாம் ஆயிடுங்கய்யா.'

'உடனே எனக்கு ஒரு கப் தந்திட்டால் நல்லது. இந்த அமைதியில் சுறுசுறுப்பாய் ரெண்டு மணி நேரம் என் வேலை ஓடும்.'

'ஆகட்டுங்கய்யா.'

சிறு ப்ளாஸ்க்கில் காபி ஊற்றி மறு கையில் ஒரு காபிக் கோப்பையுடன் அவர் அறைக்கு விரைந்தாள்.

இக்காபியைக் குடித்து விட்டு அந்த விஞ்ஞானி கண்டு பிடிக்கும் விஷயங்களில் தன் பங்கும் இருக்குமில்லையா?

பெருமிதத்துடன் அவர் அறையின் கதவைத் தட்டினாள்.

சத்தமில்லை - ஆனால் கதவு இடுக்கின் வழியே மின் வெளிச்சம் கசிந்தது.

வேலை மும்முரம் போலும் என்றெண்ணி மெதுவாய்க் கதவைத் திறந்தவளை அறை கிடந்த நிலை சஞ்சலப் படுத்தியது. மேலும் கீழுமாய்க் காகிதங்கள்... இதுவரை கண்டறியாத உபகரணங்கள்... இதுவரை முகர்ந்திராத புது நெடி..!

பலமுறை அழைத்தும் இணைந்த குளியலறையி லிருந்தும் சத்தமே இல்லாமல் போக, அவள் அவசர மாய்ச் சக்கரபாணியைத் தேடிப் போனாள்.



சக்கரமும் தன் பங்குக்கு வீட்டினுள்ளும் வெளியேவும் தேடிய பிறகு, விருந்தாளியைக் காணவில்லை எனும் தகவலைத் தன் எஜமானிடம் சொல்லக் கிளம்பினான்.

விஷயத்தை எப்படிச் சொல்வது என்ற ஒத்திகையுடன் தீவிரமாய் எஜமானின் அறைக்குள் நுழைந்தவனது முகம் கோணியது.

விருந்தாடி வந்த பெண்கள் கூட்டத்தை அங்கு அந்தக் காலை நேரம் அவன் எதிர்பார்க்கவில்லை.

அவர்களுக்கு அவனைப் பிடிக்காதது போலவே, சக்கரத்திற்கும் பெண்களை ஆகவில்லை. வீட்டில் விடுமுறைக்கு வரும் இரு இளசுகளைச் சமாளிப்பதே சிரமமாயிருக்கும். கூடுதலாய் நான்கு புதியவர்கள்.

சதா எங்கு போகலாம்... எதைச் செய்யலாம் என்ற பரபரப்புடனான வாலிப வயதில்..!

அவர்களது பேச்சைக் கேட்டவன் முகம் மாறியது... ஆனால் முயன்று தன் முகத்தை உணர்ச்சியற்று வைத்தான்... மகாதேவின் முன்பு தன் நாடகம் தொடரத் தானே வேண்டும்!

''இதுக்குத்தான் உங்களை வெளியே எட்டிக் கூடப் பார்க்கக் கூடாதுன்னு சொன்னேன்...'' - மகாதேவ் இரைந்தார்.

''ஆள் அனுப்பித் தேடச் சொல்லுங்க, ஸார்.''

தீபா கெஞ்சினாள்.

''சக்கரம், நித்யாங்கற பொண்ணைக் காணோமாம் - போய்த் தேடு.'' இவனுக்குக் கேட்கும் வகையில் அவர் கத்த, சக்கரத்தின் கண்கள் பெண்களை ஒரு முறை அல சின. துறுதுறுவென்று சுருட்டை முடியுடன் இருக்கும் பெண்ணைக் காணவில்லைதான்...!

திகைத்தாலும், தான் சொல்ல வந்த விஷயத்தையும் சொல்ல வேண்டியிருந்ததே.

''வந்து... வந்துய்யா... நம்ப விஞ்ஞானி சாரையும் காணோம் - அதைச் சொல்லத்தான் வந்தேன்.''

மகாதேவின் முகம் தக்காளியாய்ச் சிவந்தது.

''என்ன ஆளாளுக்கு விளையாடறீங்களா?''

மீனா அழுகையுடன் அப்பாவைத் தேடி ஓட, மற்ற இரு தோழிகளும் அவள் பின்னே ஓடினர்.

தன்னையே குற்றம் சாட்டுவது போல வெறித்த தன் பிள்ளைகளைப் பார்த்த மகாதேவ் மேசையை ஓங்கிக் குத்தினார்.

காகிதங்கள் துள்ளி அடங்கின.

அறை யெங்கும் விரித்த புத்தகங்கள், மேசையில் விதவிதமான பேனாக்கள், கிறுக்கலான கையெழுத்தில் காகிதச் சிதறல்கள்...

கோவர்த்தனம் தங்கியிருந்த அறையைப் பார்த்து விட்டு, கூடவே கங்கம்மா தந்த தகவல்களையும் சேகரித்துக் கொண்டு, திரும்பி வந்தனர் மீனா குழுவினர் -

''உடனே பொலிஸுக்குச் சொல்லிடுங்க ஸார்...''

''இங்க எதுவுமே சரியில்லை... பயம்மாயிருக்குது.''

பெண்களை முறைத்த மகாதேவின் கண்களில் லேஸர் கதிர் வீச்சு!

''நோ... எனக்கு இருக்கற பிரச்சனைங்க போதாதுன்னு காக்கிச் சட்டைக்காரனும் வந்து கிளறணுமா? முதல்ல நீ தேட நம்ப ஆட்களை அனுப்பு சக்கரபாணி.''

கைகளை வீசினார்.

''சாதனா, நீ கங்கம்மா கூடப் போய் அக்கம் பக்க மெல்லாம் விசாரி.''

''ஆகட்டும்ப்பா.''

''நானும் சிட்டிட்ட சொல்றேம்ப்பா!''நழுவினான் சதீஷ்.



''அது யாரு?''

''இங்க எனக்கிருக்கிற ஒரே ஃபிரண்ட்.''

தங்களால் ஆனதைச் செய்யும் முனைப்புடன் சாதனா வும் சதீஷும் கிளம்பிய பிறகும், மூன்று பெண்களும் ஒரு வித எதிர்ப்புடன் நகராமல் நின்றனர்.

''என்ன..?''

ஏறக்குறைய உறுமினார் மகாதேவ்.

''இங்கே ஒரு படப்பிடிப்பு நடக்குது. அதில் நடிக்கறது நித்யாக்குப் பிடிச்ச ஹீரோ. படப்பிடிப்பைப் பார்க்கத்தான் நித்யா போயிருக்கணும்... ஆனா என் அப்பா எங்கே, ஏன் போனார்... அதுவும் அப்பாவுடைய செருப்புக்கூட அறையிலேயே கிடக்குது.''

''விஞ்ஞானிகள்... ஏன், எழுத்தாளர்கள் கூட கொஞ்சம் விநோதமானவங்க.''

''ஆனால் அவர் வெளியே போனதைக் காவலாளி பார்க்கலையே... எப்படி அப்பா வெளியே போயிருக்கக் கூடும்? அப்பாக்கு அந்த சுரங்கப் பாதை பற்றி நாங்க எதுவும் சொல்லலை.''

''வ்வாட்... சுரங்கப் பாதை?''

கண் இடுக்கிக் கேட்டார் குழப்பமாய்.

''அது வழியாத்தானுங்களே நாங்க தினம் வெளியே போயிட்டும் வந்திட்டும் இருந்தோம்.''

''இளவயசுக்காரங்க எங்களை விடவும் விநோதமாய் இருக்கறீங்க.''

''இல்லீங்க. இந்த வீட்டில நடக்கறதுதான் விசித்திர மாய்த் தோணுது. ஆக நீங்க பொலிஸுக்குப் புகார் பண்ணிடறது நல்லது.''

''புதுத் தலைவலியை வாங்க நான் விரும்பலை. சுரங்கப் பாதைன்னு வேற யார் கிட்டவும் போய் உளறாதீங்க... வெளியே ஓடுங்க.''

விரலை நீட்டி அவர்களை அறையை விட்டு ஏறக் குறைய விரட்டினார். தங்களுக்குப் பின்னே சாத்தப்பட்ட கதவை விரோதமாய்ப் பார்த்தனர் பெண்கள்... அவமான மும் ஆத்திரமும் அவர்களை அலைக்கழித்தன.

அறைக்குப் போன மீனா கட்டிலில் விழுந்தாள் -

அவள் உடம்பும் உதடுகளும் நடுங்கின.

''நாமே பொலிஸுக்குப் ஃபோன் செய்தா என்ன லாவ்? இந்த ஆள் தகவல் தர மாட்டார்... இவர்ட்ட ஏதோ தப்பு, மர்மம் எல்லாம் இருக்குது.''

''இவருக்கும் கடல் விரல் விஷயத்துல ஒரு கை... ஒரு கை விரல் இருக்குமாயிருக்கும்.''

''இல்லைன்னா பதறித் தேடாம இப்படி விஷயத்தை மறைக்கிறதிலேயே இருக்க மாட்டார்.''

''பூகம்பத்திலேருந்து தப்பி அதை விட ஆபத்தான ஒரு மனுஷன்ட்ட வந்து மாட்டியிருக்கோம்.''

''நல்ல வேளை, எங்கம்மா இங்க வரலை.. அவங் களுக்கு அப்பாவைப் பத்தின தகவலைச் சொல்லணுமே!''

மீனாவுக்குக் கண்ணீர் பெருகியது.

''அவங்களை இப்ப காபரா படுத்த வேணாம்டீ - பொறு.''

''அம்மாட்ட நான் என்னன்னு சொல்ல முடியும்..? தவிச்சிடுவாங்க.''

கேவினாள் -

''ப்ளீஸ் மீனு... அழாதேயேன்.. எனக்குக் கை கால் எதுவும் ஓடலை.''

''எனக்கும் எதுவும் செய்யத் தோணலை. தெரியலை. கையாலாகாத்தனத்துல கண்ணீர்தான் உடனே கிளம்பிடுது.''

''ம்ம்... சுகுணா ஆன்ட்டியை நாம் இன்னும் பார்க்கலியே...''



''அவங்களுக்கு உடம்பு சரியில்லாம இருக்கும். அதி காலைல அவங்க அறையை விட்டே வெளியே வர்ற தில்லையாம்.''

''ஆனா அவங்க இந்த வீட்டு எஜமானி. அவங்க... அதாவது மனைவி பேச்சுக்கு மட்டும்தான் மகாதேவ் கட்டுப்படுவார்னு படுது.''

''சரி - போவோம்.''

ஆனால் சதீஷின் தாயின் அறையை நெருங்க, அதனுள்ளிருந்து கேட்ட மகாதேவின் குரல் அவர்களைத் தடுத்து நிறுத்தியது.

''இது அவர் அறையும்தானே - நமக்கது தோணலை பார்.''

''பரவாயில்ல. எங்கப்பா கிடைக்கணும்ன்னா ஆன்ட் டியிடம் எல்லாத்தையும் சொல்லிட வேணும்தான். அவங்க கணவனை நாம சந்தேகப்படறது ஆன்ட்டிக்கும் தெரியட்டும்.''

முன்னேறினாள் மீனா.

தம்பதியின் பேச்சு தெளிவாய் இவர்களை எட்டியது.

''நீ சொல்றது சரி, சுகுணா. ஆனா நமக்குத் தெரிஞ்ச இன்ஸ்பெக்டர் வில்சன் இப்ப ஊரிலேயே இல்லையே... அவர் இருந்தால் கேஸை நமக்கு ஏற்றது போல நகர்த்துவார்.''

''எங்கே போயிருக்கார்?''

''அவர் மகன் என்ஜினியரிங் காலேஜில் சேர்ந்திருக் கானே - அவனைப் பார்க்க.''

''அவர் மனைவி அவங்க 'ஸெல்' எண்ணை எனக்குக் கொடுத்திருந்தாங்க. இந்த அவசரத்துக்கு அதிலே கூப்பிடலாம்.''

''ரெண்டு நாளைக்குள்ளே வந்திடுவார்... ஏன் கூப்பிட்டு...''

''தொலைஞ்சிருக்கறது ஒரு பொண்ணுங்க.''

அவர் மனைவி எண்களை அழுத்திப் பேச ஆரம்பிக்க பெண்களின் முகம் சற்றுத் தெளிந்தது. ஆனால் கங்கம்மா தன் எஜமானிக்கான ஏதோ மருந்துடன் வர, தொடர்ந்து இருந்து சம்பாஷணையைக் கேட்க முடியாமல் மறுபக்கம் நழுவினார்கள்.

## 12



நித்யா கண்களைத் திறந்த போதும் இருட்டாகவே இருந்தது - ஏதும் புலப் படாத சுடர் இருட்டு.

ஒருவேளை தான் குருடாகி விட்டோமோ... என்ற பீதியில் கண்களைக் கசக்கினாள்.

கை காலெல்லாம் வீங்கிக் கனத்தது போன்ற உணர்வு.

கடைசியாய் முகர்ந்த அந்த நெடி இன்னும் அவளைச் சுற்றியிருந்தது.

''ம்மா... ப்பா..'' அரற்றினாள்.

''யாரும்மா அது?''

இருட்டில் அசரீரி போல ஒரு குரல் அவளை விசாரித்தது.

''யாரு நீ, முரளியா?''

''கோவர்த்தனம்.''

''ஓ.. மீனாவுடைய அப்பாவா?''

''ம்ம்... நீ யாரு?''

''நித்யா அங்க்கிள் - மீனாவோட சிநேகிதி.''

''நீ எப்படிம்மா இங்கே வந்தே? இதுவரை நான் இங்க தனியாய் இருக்கறதால்ல நினைச்சிட்டிருந்தேன்!''

உடல் கனத்து மரத்திருந்தாலும் தன் கால்கள் மட்டுமே கட்டப்பட்டிருக்க, கைகள் சுதந்திரமாகவே இருப்பது புரிய, அவற்றை ஊன்றியபடி எழுந்து உட்கார்ந்தாள். நினைவைக் கசக்கி சம்பவத்திற்கான காரணத்தை முடிந்த வரை கோர்வையாகச் சொன்னாள்.



''ஓஹோ? முரளிங்கறவர் மகாதேவுடைய எதிரி, சரி. ஆனா இத்தனை மோசமான முரட்டு எதிரியாய் இருப் பான்னு நினைக்கலை.''

''எதனால் உங்களை இங்க தூக்கிட்டு வந்திருக்காங்க அங்க்கிள்?''

''என்னை அள்ளிட்டு வந்த காரணம் எனக்கு ஓரளவு புரியுது - ஆனா உன்னை ஏன் இழுத்திட்டு வந்தாங் கன்னுதான்... நீ ஏன் என் அறைக்கு வந்தேம்மா?''

''அது... வந்து...'' மென்று முழுங்கித் தன் சினிமா மோகத்தைச் சொன்னாள் நித்யா.

''ஷூட்டிங் பார்க்க நான் சுரங்கப் பாதை வழியாய் வெளியே போகலாம்னு உங்க அறைக்கு வந்தேன் அங்க்கிள் - இது பற்றி மீனா, யாருகிட்டேயும் நான் சொல் லலை. சொன்னால் விட்டிருக்க மாட்டாங்க - சுரங்கப் பாதை உங்க அறை அலமாரியிலேருந்துதான் ஆரம்பிக்கும்...''

''என்னம்மா விட்டலாச்சாரி கதை போல ஏதேதோ சொல்றே?''

''அடடே, அங்க்கிள்! அப்ப நீங்களும் சினிமா பார்ப்பீங்க?''

அந்நிலையிலும் உற்சாகமானாள் நித்யா!

''உண்டு - ஆனா ஈடுபாடு கிடையாது. சினிமா ஒரு பொழுதுபோக்கிற்கான சாதனம். மன அழுத்தத்தைக் குறைச் சுக்கறதுக்கான கேளிக்கை... வாரத்துக்கு மூணு மணிக்கு மேலே அதைச் சிந்திக்கறதே தப்பு.''

''ம்ம்..''

''என் ஈடுபாடெல்லாம் ஆராய்ச்சியில்தான்.''

''இப்ப என்ன ஆராய்ச்சியிலே இருக்கீங்க?''

''இந்தக் கடல் விரல்களை மழுங்க, மறையச் செய் யணும்னு மகாதேவ் கேட்டுக்கிட்டான். இந்த வீட்டோடு சுற்றிலும் இருக்கற பல ஏக்கர் நிலத்தையும் வாங்கிப்

போட்டுகிட்டான். நிலமோ சதுப்பாய்க் கிடக்குது. அதைச் சீராக்கிட்டால் இதை ஒரு கேளிக்கை, விளையாட்டு உலகமாய் மாற்றிடலாம்னு அவனுக்குள் ஒரு திட்டம்.''

''கோல்டன் பீச் மாதிரியா?''

''ஆமாம். அமைதி வேணும்னு இந்த இடத்தைத் தேர்ந்தெடுத்த மகாதேவுக்கு இப்போது வேறு தேவைகள். நிலையான வருமானம்தான் அதிலே முதல் தேவை. நம் நாட்டிலே எழுத்தை மட்டும் நம்பி ஜீவிக்க முடியாது...''

''மகாதேவ் ஸர் பரம்பரைப் பணக்காரராச்சே!''

''குந்தித் தின்றால் குன்றே குறைஞ்சிடுமேம்மா - சாதனாவுக்குச் சொந்தத்திலே ரெண்டு முறைப் பையன்க இருக்காங்க போல... ஏதாவது முடிவு செய்திடணும்னு அவன் மனைவி நினைக்கிறாங்க.''

சாதனாவின் தாயார் பரம்பரை நகைகளைப் புது தினுசில் மாற்றிச் செய்வது பற்றி ஒரு முறை பேச்செழுந் ததை 'நித்யா நினைவு கூர்ந்தாள்' - ''அவங்ககிட்டதான் வேண்டிய நகை இருக்கே - பிறகென்ன?''

''மற்ற கல்யாணச் செலவுகள் லட்சக் கணக்கிலே இழுக்குமேம்மா. சதீஷின் படிப்பும் இருக்குது. மகாதேவ் கேளிக்கை உலகைத் தானே ஆரம்பிக்கலாமா, இல்ல... இடத்தை நல்ல விலைக்கு விற்கலாமாங்கற யோசனையில் இருக்கான். சதுப்பு நிலம் விலை போகுமா? இந்த ஈரப் பதத்தைக் குறைத்துட்டால் நல்ல விலைக்குப் போகும்...''

''ம்... இதில் முரளிக்கு என்ன சங்கடம்?''

உட்கார்ந்திருந்தவள் முழந்தாளிட்டு அப்படியே எழ முயன்றாள் -

''ஷ்ஷ்.''

கோவர்த்தனம் எச்சரிக்க, அப்படியே அசையாமல் கவனித்தாள் - யாரோ மணலில் கால் புதைய நடந்து



வரும் சத்தம் கேட்டது. வட்ட வெளிச்சம் ஒன்று மங்கலாய்த் தோன்றி, பின் இவர்களை நெருங்கலானது.

★ ★ ★

தொப்பை, இரட்டை நாடி முகம் என்றில்லாமல் 'சிக்'கென்றிருந்தார் இன்ஸ்பெக்டர் வில்சன்.

காக்கிச் சட்டையின் விரைப்பு அவர் முதுகிலும், மடிப்பின் கூர்மை அவர் கண்களிலும் இருந்தன.

''ஸாரி, இன்ஸ்பெக்டர்... உங்க மகனைப் பார்க்கக் கிளம்பின உங்களை இவ இப்படி அவசரமாய் வரவழைச் சுட்டா...''

மூன்றாம் முறையாய் மன்னிப்புக் கோரலுடன் தன் மனைவியையும் குற்றம் சாட்டிக் கொண்டிருந்தார் மகாதேவ்.

'திருமணம் செய்து கொள்ள ஒரு நல்ல காரணம் - தவறுகள் நேரும்போது குற்றம் சாட்ட உங்களுக்கு ஒரு நபர் கிடைப்பார்!' என்ற சிரிப்பு மொழியை ருசுப் படுத்தியது அவர் பேச்சு.

''அதான் சொன்னேனே ஸர், பையனைப் பார்த்தோம் - 2 நாள் விடுமுறைங்கறதால அவனையும் கூட்டிட்டுத் திரும்பறப்போ கயத்தாறு பக்கம் உங்க தகவல் கிடைச்சது... தவிர இங்க நடந்திருப்பது விபரீதமான விஷயம். ஆக அவங்க செய்ததுதான் சரி... ஆனா உடனே நீங்க இங்கேயுள்ள அதாவது பக்கத்து ஸ்டேஷன்ல புகார் தந்திருக்கணும்...''

''அதுதான் ஸர் சங்கடமான விஷயம்... போலீஸ் காரங்க வந்தால் நம்ப வீட்டையே ரெண்டு படுத்திரு வாங்க... நம்மையும் அங்கே இழுத்துக் கொண்டு போய்த் தராதரம் இல்லாமல் நடத்தி...''

தலையாட்டி மறுத்தார் காவல் துறை அதிகாரி.

''உங்களுக்குப் பிரச்சனையின் தீவிரம் புரியலைன்னு நினைக்கறேன். உங்க நண்பர் திறமையான விஞ்ஞானி. அடுத்தது ஒரு கல்லூரிப் பெண்... இதுக்கு முன்னே

காணாமல் போன சில பெண்களைப் பற்றியும் இப்படித்தான் காலம் கடந்து புகார் தந்திருக்காங்க - என்ன பிரயோஜனம்? இப்பக் காணாமற் போனவங்களுக்கு ஆபத்துன்னா... நாம உடனே காப்பற்றணும்னா...''

அதற்குள் மீனா அழ ஆரம்பித்திருந்தாள்.

''அடடா... ஒரு பேச்சுக்குச் சொன்னேம்மா. இந்தச் செய்தியைச் செய்தித் தாள்கள் பரபரப்பாய்ப் பரப்பும் - எல்லாரும் காவல் துறையைத்தான் குற்றம் சொல்வாங்க. உடனே தகவல் கிடைத்தால் அது எங்களுக்குப் பெரிய உதவி... உடம்புல சின்னக் கோளாறு வரவும் டாக்டரிடம் காட்டிட்டா பாதிப்பு கம்மியில்லையா? அதே போலத்தான்...''

''இப்ப என்ன ஸர் நடவடிக்கை எடுத்திருக்கீங்க?''

''வரும்போதே ஸ்டேஷனுக்குத் தகவல் தந்தாச் சும்மா... அப்படி யாரும் இந்த ஊரை விட்டுப் போன தாய்த் தெரியலை... ஆக இங்கேதான் மறைவாய் அவங்களை வச்சிருக்கணும்.''

வெளியே மழைக்காகக் காத்திருந்த வானத்தைப் போலவே, மீனாவின் முகமும் இருண்டிருந்தது.

''சயன்டிஸ்ட் கோவர்த்தனம் என்ன விஷயமாய் இங்கே வந்தார்?''

''எனக்கு உதவத்தான், இன்ஸ்பெக்டர். இருந்த பணத்தைப் போட்டு இந்தச் சொத்தை வாங்கிட்டேன்... பணம் முடங்கிடுச்சு. இப்போ மனைவிக்குச் சிகிச்சை, பிள்ளைங்க படிப்புன்னு பெரிய செலவுங்க வருது... இருக்கற இந்தச் சதுப்பு நிலத்தை விற்கவும் வழியில்லை... இது பற்றி கோவர்த்தனத்திடம் ஒரு நாள் கவலையாய்ப் பேசினேன்...''

இன்ஸ்பெக்டர் குறுக்கிடாமல் கவனித்தார்.

பெண்களும் உன்னிப்பாய்க் கேட்டனர்.



''அது குறித்து ஆராய்ச்சி செய்வதாய்ச் சொன்னான் - அவன் கெட்டிக்காரன். கடற்கரை விளிம்புல இருபதடி ஆழத்துக்குத் தடுப்புச் சுவர்களைக் கட்டி, அதுக்கும் கீழே உறிஞ்சு குழாய்களை வச்சால், கடல் நீர் அரிக்காது - ஏற்கெனவே கசிந்து மண்ணைக் குழம்பாக்கி இருக்கும் நீரும் உறிஞ்சப்பட்டிரும்ன்ற மாதிரி ஏதோ சொன்னான்.''

''ம்ம் - சுவாரஸ்யமாய் இருக்குது. அது சாத்தியம்னா அரசாங்கமே கூட ஏற்றுச் செயல்படுத்த வேண்டிய திட்டம் இது. வீணாய்க் கிடக்கற நிலம் பலருக்குப் பயன்படக் கூடுமே...''

தொப்பியை உருட்டியபடி பேசினார் அதிகாரி.

''வீணான கடல் விரல் பற்றிய பயமும் போகும்... இங்கேயிருந்த பலர் வேறு ஊர்களுக்குப் போயாச்சு... ஆக நானும் அவனை மும்முரமாக்கினேன்.''

''அந்தத் திட்டத்தைச் செயல்படுத்தத்தான் வந்தாரா?''

''மரத்தூளுடன் சில ரசாயனப் பொருள்களைச் சதுப்பில் ஓரடி உயரத்துக்குப் பரப்பினால் மணல் சீக்கிரமே உலர் தன்மைக்கு மாறிடும்னு ஒரு சோதனை மூலம் கண்டு பிடிச்சானாம். சிறிய அளவிலே அதைச் சோதிக்கலாம்னு வந்தான்.''

''இந்த உங்க திட்டம் வேறு யாருக்கெல்லாம் தெரியும்?''

''வேற யாருக்கும் தெரியாது - என் மனைவி உள்பட.''

''நீங்க சொல்லாட்டியும் கூட விஷயம் வெளியே போகக் கூடும் ஸர்-ஏன்னா சுவர்களுக்கும் கூடக் காது உண்டு.''

மீசையை மிருதுவாய் நீவியவர் காபிக் கோப்பைகளுடனான தட்டுடன் உள்ளே நுழைந்த சக்கரபாணியை ஓரக் கண்ணால் பார்த்தார்.

அவன் பவ்யமாய் நீட்டிய தட்டிலிருந்து ஒரு கோப்பையை எடுத்துக் கொண்டார்.

ஒரு மிடறு உறிஞ்சியவர் மீண்டும் அவனை முழுதாய்ப் பார்த்தார் -

''காபி ஆறியிருக்குதே.''

என்றபடி மெள்ள எழுந்தார் -

''அப்படியா... வேற கொண்டு வரச் சொல்றேன், இன்ஸ்பெக்டர் - அவனுக்குக் காது சரியாய்க் கேளாது.''

''இத்தனை நேரம் அருமையாய் ஒட்டுக் கேட்டுத்தான் இப்படி காபியை ஆற விட்டிருக்கான்... ம்ம்?''

இந்த அதட்டலைச் சக்கரபாணி எதிர்பார்க்கவில்லை -

அவன் கண்கள் சற்று அச்சத்துடன் உருண்டன.

''என்னடா முழிக்கறே?'' கையை ஓங்கினார் இன்ஸ்பெக்டர் வில்சன்.

## 13



மங்கலான பாட்டரி ஒளியில் அந்தக் குகை மேலும் பயங்கரமாய்த் தெரிந்தது. அரக்கனது வாய் போலப் பிளந்திருந்தது அதன் வாசல். நீர் கசிந்த பாறையின் சில பகுதிகள் வெளிச்சம் பட்டு வாயின் தங்கப் பல் போல மின்னின!

தன்னுடன் அடைபட்டிருந்த மீனாவின் அப்பாவைப் பார்த்தாள் நித்யா.

கோடு போட்ட பைஜாமா சட்டையில் சிறு பையன் போலிருந்தார். கீழே மிருதுவான கடல் மணலிருக்க, அதில் சில கம்பங்களை ஊன்றி அதில்தான் தாங்கள் பிணைக்கப் பட்டிருக்கிறோம் என்பதையும் கண்டு கொண்டாள்.

ஓரமாய் மூடியுடனான மண் கூஜா.

அதன் அருகே ரொட்டி, பழம் என்று சில தின்பண்டங் கள் ப்ளாஸ்டிக் பையினுள் இட்டுக் கட்டப்பட்டிருந்தன.

நித்தியாவிற்குள் ஒரு நிம்மதி பரவியது.



ஆகத் தங்களைக் கடத்திய கயவர்களுக்குத் தங்களைக் கொல்லும் நோக்கமில்லை -

என்பதான நிம்மதி.

தவிர தன்னுடன் இன்னொரு கைதி இருக்கும் தெம்பு வேறு.

''என்ன... நல்லாத் தூங்கினீங்களா?''

''ஆமாம்... இங்க ஏக சௌகர்யமில்லையா... அசந்து தூங்கினோம்.''

நக்கலாய்ப் பதில் சொன்ன நித்யாவைச் சற்று ஆச்சரிய மாய்ப் பார்த்தான் முரளிதர்.

''ம்ம்... துடுக்கான பொண்ணுதான் - ஆனா நீ விஞ் ஞானி சாரின் அறையிலே என்ன பண்ணிட்டிருந்தே..?''

''அது நான் உங்களிடம் கேட்க வேண்டிய கேள்வி. நாங்க எல்லாரும் மகாதேவ் ஸர் வீட்டின் விருந்தாளிங்க... ஆக நான் அங்கிருந்ததில் ஆச்சர்யமில்லை. நீங்க அங்கே வந்ததும், வந்த முறையும்தான் அதிர்ச்சி.''

அவளை அலட்சியப்படுத்தி விட்டுக் கோவர்த்தனம் பக்கமாய்த் திரும்பினான். வெளியே பகல் என்றாலும் இருட்டுக் குகைக்குள் போதாத வெளிச்சத்தில் அவர்களது நிழல்கள் கரும் பூதங்களாய் அசைந்தன.

''இந்த விளையாட்டுப் பேச்சுக்கெல்லாம் இப்ப நேரமில்லை... உங்களை இங்க கூட்டிட்டு வந்ததுக்கான காரணம் தெரியுமில்லை, விஞ்ஞானி சர்?''

''எண்ணங்களைக் கண்டுபிடிக்கும் கருவி ஏதும் இன்னும் கண்டு பிடிக்கப்படலை.''

''அது எதுக்கு? அதான் நம்ப முகத்திலேயே தெரிஞ் சிடுதே... நேரே விஷயத்துக்கு வரேன் - நீங்க இந்த சதுப்பு நிலத்தை... மண்ணை மாற்றக் கூடாது மிஸ்டர் கோவர்த் தனம்.''

''இப்படியே இருந்தால் அது யாருக்கும் பயனில்லையே.''

''இல்லையே... எனக்கு அதுதான் வசதி.''

''அதெப்படி?''

''பெண்களை இவர் கொன்னு புதைச்சுட்டு, கடல் விரல் எடுத்து முழுங்கிடுச்சுன்னு கதை விட வசதி - அப்படித்தானே?''

பேசிய நித்யாவை மீண்டும் சிறு வியப்புடன் பார்த்தான் முரளிதரன்.

''ம்ம்... பட்டணத்துப் பொண்ணு ஓரளவு புத்திசாலிதான்.''

கோவர்த்தனம் அதிர்ந்திருந்தார் -

''பெண்களைக் கொன்று புதைச்சியா?''

''இந்தப் பொண்ணு ஏதோ அரை குறையாய்த் தெரிஞ்சுட்டுப் பேசறா... இந்த ஒத்தப்பனூரிலிருந்து குட்டிகளுக்குக் குண்டுச் சட்டியில் குதிரை ஓட்டி அலுத்துப் போச்சு... எப்படா வெளி உலகத்தைப் பார்ப்போம்னு துடிச்சாளுங்க. அதுக்கு நான் கொஞ்சம் உதவினேன். அவ்வளவுதான்.''

''அப்ப சீலாயி பேத்தி, சிட்டியின் அக்கா - இவங்களை எல்லாம் நீ கொல்லலியா?''

''நான் என்ன சைக்கோவா? அவங்களைக் கொன்னு கூறு போட்டுச் சந்தோஷப்பட? அவங்களைச் சந்தோஷப் படுத்தினேன்னு வையி... எனக்குக் கள்ளத் தோணியிலே வெளிநாட்டுப் பொருட்கள் வரும். காலியாய்ப் போற படகிலே துடிச்ச இதுங்களை ஏற்றி விட்டேன்.''

''அதாவது விற்றே?''

''இவளுங்க என்ன பேரழகிங்களா? பாவைகள் மூலம் எனக்குக் காசு அதிகம் வரலைம்மா - பதுமைங்க மூலம் நல்ல வருமானம்.''

''அப்படீன்னா?''

''மரத்திலே பழங்காலச் சிற்பங்கள் போலச் செதுக்கி அதை இந்தச் சதுப்பு மண்ணிலே சில மாதங்கள் புதைச்சு வச்சா. அது புராதனப் பொருள் போல ஆயிடும் - தேர்ந்த வல்லுநரும் கூட அதன் காலத்தைக் கணிக்க முடியாமத் திணறுறாங்களாம். இந்த வித்தையை நான் ஒரு குட்டி விஞ்ஞானியை வச்சுக் கண்டு பிடிச்சேன். அதுல நல்ல காசு. சில வல்லுநர்கள் இந்தச் சிலைங்க 200 வருஷப் பழமைங்க, மத்தவங்க 500 வருஷப் புராதனச் சிற்பம் இதுன்னு மோதிக்கறாங்களாம்... தமாஷுதான். ஆக இந்த மண்ணு விசேஷம். இதை உலர வைக்கறேன்னா எப்படி?''



வில்லன் நடிகர் நம்பியாரைப் போலக் கழுத்தை இடுக்கித் தலை சாய்த்துக் கேட்டான் முரளிதர்.

''அப்படீன்னா நீங்க மகாதேவனிடமிருந்து ஒரு பகுதி சதுப்பு நிலத்தை நல்ல விலை தந்து வாங்கிக்கோங்க... மற்றதை உலர வைத்து வேறு யாருக்கேனும் விற்கட்டும். ஆனா இப்படி அயல் நாட்டாரை ஏமாற்றித் தொழில் பண்றது சரியில்லை - சட்ட விரோதம்... தேசத்துக்கும் அவமானம்.''

''சட்டம் எங்க தேவைகளைப் புரிஞ்சுக்க மாட்டேங்குது, சர் - எத்தனை பெரிய வீட்டு மனுஷங்க... பெரும் புள்ளிகள் 'கோக்' கூடக் கிடைக்காமல் தவிக்கறாங்க... ஆனா அதை அதிகாரப் பூர்வமாய் இந்தியாவுக்குள்ளே கொண்டு வர முடியலியே..?''

தாங்கள் ஒளிந்திருந்து கேட்ட சம்பாஷணையில் 'கோக்' என்ற சொல்லைக் கேட்ட நினைப்பு வந்தது நித்யாவிற்கு.

'கோக் குடிடா<br>
ராப் படிடா<br>
கானாவிலே கலாய்க்கலாம்!'

என்ற விஜய்யின் ஆட்டம் கூடவே!

''எத்தனை விளம்பரம் அதுக்கு... குக்கிராமத்திலே கூட கோக் கிடைக்குதே.''

''பாப்பா - நாம அந்தக் கோக், குடிக்கற கோக் பத்தி பேசலை. அடிக்கற பவுடர் பற்றி பேசறோம்.''

''கொக்கேய்ன்னா... போதைப் பொருளா?''

துடிப்பானார் கோவர்த்தனம்... தடுமாறி எழுந்து நிற்க முயன்றார்.

''அதுதான் கள்ளத்தோணியிலே பாதுகாப்பாய் வருது - பிறகென்ன வெறும் பவுடரும் சென்ட்டுமா? அதுதான் பர்மா பஜாருல்ல சல்லிசாய்க் கிடைக்குதே...''

''அந்தப் படகுகளுக்குத்தான் மகாதேவ் அங்க்கிள் வீட்டு மேலிருந்து சிக்னல் காட்டினீங்களா?''

''அடடே.... பாப்பா வந்த நாலு நாளுல நிறைய விஷயத்தை மோப்பம் பிடிச்சிருக்கியே.''

''சக்கரபாணி உங்களுக்கு உடந்தை?''

''காசு தந்தால் யாரும் உடந்தைதான்... இப்ப காசு விஷயமாய்ப் பேசத்தான், விஞ்ஞானி சார்! உங்களை இங்கே கூட்டிட்டு வந்தேன்.''

''கடத்திட்டு வந்திருக்கீங்க.''

''இனி பேசாம அப்படி கம்னு உட்காரு, பொண்ணு. பிஸினஸ் பேசும்போது இடையிடையே உளறக்கூடாது.''

இதுவரை வீட்டிற்கு வந்த விருந்தாளியைப் போல இயல்பாய்ப் பேசிய முரளிதரின் முகம் இப்போது விகாரமானது.

தப்பான காரியங்களையே செய்யும் அவன் முகம் சரியானதாயில்லை.

கோவர்த்தனத்தை மெல்ல நெருங்கினான் -

''பேசாமப் போயிடணும். என்ன ஏதுன்னு விளக்கம் சொல்லிட்டிருக்காமப் போயிடணும்.. என்ன?''

அவன் தொனி மிரட்டியது.

''இத்தனை ஏக்கருங்க வீணாக வேண்டாமே... அழகான கடற்கரைச் சூழல்.''

''எனக்கிது தேவை இல்லையே.''



''ஆனா நீங்க செய்றது சட்டத்துக்குப் புறம்பானது. நீங்க செய்வதாய்ச் சொன்னதையெல்லாம் நான் வெளியே சொல்லலை... ஆனா போன பெண்களை மீட்க முயற்சி செய்ங்க... நேர்மையாய்ப் பணம் சம்பாதிக்க நூறு வழியிருக்கே. இந்த ஏரியா மணலை உலர வைத்த பிறகு இதை நீங்களே வாங்கி...''

''சரி வாங்கி?''

''ஒரு திறந்த வெளி சினிமா அரங்கம் ஆரம்பிக்கலாம்... இல்லைன்னா தரமான ஒரு உணவகம். இந்தக் காற்றுக்கும் அற்புதமான இயற்கைக் காட்சிக்கும் பலர் இங்கே பிக்னிக் போல வந்து ஒரு நாளைச் சந்தோஷமாய்க் கழிக்கலாம்.''

''கேட்க நல்லாத்தான் இருக்குது - இதுக்கெல்லாம் முதல்?'' விரலைச் சுண்டிக் காட்டினான் - ''துட்டு.. உங்கப்பனா தருவான்?''

இப்போது கோவர்த்தனத்தின் முகமும் இறுகியது.

''கொக்கேய்ன் ஒரு கிராம் என்ன விலைக்கு விற்கறேன் தெரியுமா - சொல்லு, பொண்ணு! ஒரு கிராம் தங்கம் என்ன விலை?''

''நானூத்தைம்பது.''

''இது பத்து மடங்கு அதிகம் - நாலாயிரம்வரை போகும் - தேவை அப்படி. இது பெரிய லெவல்ல உள்ளவங்க பயன்படுத்தற போதைப் பொருள். பணம் அங்கே பொருட்டேயில்லை.''

''லாடின் அமெரிக்காவில விளையறது உனக்கு எப்படி வருது?''

''ஆங்.. படிச்சவங்க படிச்சவங்கதான். இது மாதிரி விவரமெல்லாம் தெரிஞ்சிருக்குது. எங்க விளைஞ்சா என்ன? தேவைப்பட்ட இடத்துக்குக் கொண்டு போய்ச்

சேர்க்கறது எங்க சேவை. காஷ்மீர்ல விளையற ஆப்பிள் உலகம் முழுக்க உருட்டி விடறாப்பல...''

''சரி, இப்ப என்ன சொல்ல வர்றே... சதுப்பு மணலை மாற்றக் கூடாது?''

''ரைட்.. பணம் ரொம்பத் தேவைன்னா மகாதேவனை வீடு, மொத்த நிலத்தையும் எனக்கு வித்துடச் சொல்லு.''

''இதை அவர்கிட்டே நேரே கேட்கலாமே... எதுக்கு இந்த நாடகம்?''

''மிரட்டிக் கேட்டாத்தான் பணிவான்... இல்லைன்னு நிமிர்ந்து நின்னு பேரம் பேசுவான்ல? தவிர எனக்கும் இந்தக் கிராமத்துல வேற பொழுது போக்கு ஏது... இப்படி டிராமா போட்டுக்க வேண்டியதுதான்.''

''வாங்க என்ன விலை தருவே?''

''நான் சொல்றதுதான் விலை.''

''ஆனா வியாபாரத்திலே எப்போதும் பணம் மட்டுமே பிரதானமில்லை. நம்ப வீட்டை வாங்கறவங்க நல்லவங்களாய் இருக்கணும். வர்ற காசு நாணயமாய்ச் சம்பாதிச்சதாய் இருக்கணும்னு தோணும்.''

''ஆங்... அப்படிக்கூடத் தோணலாம், இல்ல? அதுக்குத்தான் இந்த மிரட்டல். பயல் அரண்டு என் வழிக்கு வரணும்..''

''பொலிஸ்தான் வரும்.''

பதிலுக்கு மிரட்டிய நித்யாவை எரிச்சலுடன் பார்த்தான் முரளிதர்.

14



ஏதோ திகில் படத்தைப் பார்க்கும் பிரமையில் இருந்தாள் நித்யா. சினிமா படப் பிடிப்பை வேடிக்கை பார்க்கக் கிளம்பியவளுக்கு இப்படி ஒரு அனுபவம்.



''பொலிஸா? இதுவரை மகாதேவ் புகாரே பண்ணியிருக்க மாட்டானே - பிறகெப்படி பொலிஸ் வரும்? அதெல்லாம் சக்கரபாணி பொறுப்பு. பொலிஸ் பற்றி இல்லாத பொல்லாததெல்லாம் சொல்லி அந்த முட்டாள் எழுத்தாளனை மிரட்டி வைக்கச் சொல்லியிருக்கேன் - இப்ப நீங்க முடிவு சொல்லிட்டால் உடனே மகாதேவுக்கு போன் போட்டுப் பேசிடுவேன். அதட்டல் உருட்டலாய்ப் பேசினாலும் மகாதேவ் உள்ளுக்குள் பயந்தவன்... இந்தப் பொண்ணும் சேர்ந்து சிக்கினது நல்லதுக்குத்தான். இரட்டைக் குழல் துப்பாக்கியை நீட்டின மாதிரி... நடுங்கி என் வழிக்கு வரணும்.''

''நீ இங்கேருந்து அனுப்பின பெண்களைப் பற்றி ஏதும் தகவல் தெரியுமா?'' திடும்மென நித்யா கேட்ட கேள்விக்கு அலட்சியமாய்த் தோள் குலுக்கினான் முரளிதர்.

''ரொம்ப முக்கியமான கேள்வி... நான் என்ன அதுங்களுக்கு அப்பனா? போகணும்னு ஆசைப்பட்டதுங்களைப் படகுல ஏத்தி விட்டு 'டாட்டா' காண்பிச்சேன். அதுக்கும் ஓரளவு பணம் வந்ததுதான்... ஆனா பணத்தைவிட இங்கே கடல் விரல் பற்றி ஒரு பயம் பரவிச்சே... அதுதான் எங்குறி. கொஞ்சம் அழகாத் தெரியறதுங்களுக்கு சென்ட், சோப்புன்னு சும்மாவே தருவேன். துபாய்ல இதோட, தினம் கறிச்சாப்பாடு, மாசம் 20,000 சம்பளம்னு சொல்வேன் -

''எப்போ எப்போ போக'ன்னு பறக்கும்ங்க... அப்படித் துள்ளுற மீனுங்களைத்தான் நான் படகுல தூக்கிப் போடறது.''

தன்னையே மெச்சிக் கொள்பவனாய்ச் சிரித்தான்.

''ச்சே... பாவி. இது கிரிமினல் குற்றம்... தவிர அந்தப் பெண்ணைப் பெத்தவங்க எப்படித் துடிச்சிருப்பாங்க... இன்னும் ஏங்கிட்டிருப்பாங்க.''

தன்னிச்சையாய்ப் பொருமிய நித்யாவிற்குச் சீலாயிக் கிழவியின் புலம்பல் இன்னும் காதிலே கேட்பதான பிரமை... துக்கம் பெருகி நரி போல ஊளையிட்ட ஒரு கிழவி யின் ஒப்பாரி... அதில் நித்யாவின் ஆத்திரம் பெருகியது.

''அந்தப் பெண்களை நாசப்படுத்தின நீ... நாசமாத் தான் போவே... அழிஞ்சே போயிடுவே...''

வெறி பிடித்தவளாய்க் கீழேயிருந்த மண்ணை அள்ளி முரளிதர் முகத்தில் விசிறினாள்.

இந்த விரைவை, வெறியை அவன் எதிர்பார்த்திருக்க வில்லை.

''நாயே... கண்ணுல மண்ணா போடற?''

''நீதான் நாய்... போதைப் பொருள் விக்கறது, பொம் பளையைக் கடத்தறதுன்னு இருக்கற நீதான் பொறுக்கி நாய்.''

மேலும் மண்ணள்ளித் தூற்றினாள். அதற்குள் கோவர்த் தனம் அங்கு ஊன்றப்பட்டிருந்த பெரிய கழியை ஆட்டி அசைத்துப் பிடுங்கினார். ஏற்கெனவே இருளில் கைகளால் துழாவிக் கம்பைச் சுற்றிலும் குழி பறித்திருந்ததால் அது லகுவாய்ச் சரிந்தது.

அதை வாகாய் முரளிதரின் தலை நோக்கிச் சரிய வைத்தார்.

''டேய்...''

முரளிதர் வேதனையான ஆத்திரத்தில் கூச்சலிட்டான். அது குகைகளில் பயங்கரமாய் எதிரொலித்தது.

வேறு பக்கமிருந்து காலடிச் சத்தம் வரக் கேட்டது.

உருண்டிருந்த டார்ச்சை எடுத்த கோவர்த்தனம், நித்யாவை இழுத்துக் கொண்டு மறைவு நோக்கி ஓடினார்.

அறை போலிருந்த குகையை விட்டு வெளியேறிய வர்கள், மறுபக்கப் பாறைச் சரிவின் பின்னே ஒடுங்கினார்கள்.

''அங்கிள் அதிகம் ஓடக் கூடாது... ஏன்னா இந்தச் சுரங்க வழி கன்னா பின்னான்னு இருக்குமாம்... சதீஷ்



சொல்வான். நாங்க வழக்கமாய்ப் போய் வர பாதையில சாக்பீஸ்ஸால அடையாளக் குறி போட்டிருப்பான்... மற்ற பாதையில போனால் வழி தவறிடக் கூடும்.''

கிசுகிசுப்பாய் எச்சரித்தாள்.

காலடிச் சத்தம் ஏதுமில்லை...

அரவமற்ற நிசப்தம்.

பாறையில் சாக்பீஸ் தடத்திற்காய்த் தேட, டார்ச்சை உயர்த்தினார் கோவர்த்தனம்.

அந்த வெளிச்ச வட்டத்துக்குள் சிக்கியது ஒரு புதிய முகம்...

''ஐயோ...'' - நித்யா அலறினாள்!

''நாங்க பொலிஸ்... பயப்பட வேணாம் - ரிலாக்ஸ்.''

ஆரம்ப அதிர்ச்சி குறைந்ததும் புது முகத்தின் காக்கிச் சீருடை கண்ணில் பட்டது.

உதவி வந்து விட்டது என்றதும், இதுவரை தன்னைச் செலுத்திய துணிவெல்லாம் வடிந்தது போலத் தொய்ந்து விட்டாள், நித்யா.

ஆபத்து விலகிய நிம்மதியால் வந்த தொய்வு.

''அக்கா... அடி ஏதுமில்லையே?''

என்ற சதீஷின் கையை இறுகப் பற்றிக் கொண்டாள்.

''முரளிதானேக்கா?''

''ஆமடா... பெரிய கிரிமினல் அவன்... பொலிஸுக் கும் எல்லாம் தெரிஞ்சிருச்சா?''

''இன்ஸ்பெக்டர் சக்கரத்தைச் சுழல விட்டுட்டார்... நாலே அறை - அவன் விஷயத்தைக் கக்கிட்டான்.''

''எப்படிக் கண்டுபிடிச்சீங்க?''

''பிள்ளைங்கதான் சுரங்கப் பாதை பற்றிச் சொன்னாங்க ஸர்... நூல் கண்டை உருட்டிட்டே தேடினோம். சத்தம் கேட்டதும் இடத்தை நெருங்கிட்டோம்... உடனே எங்களுக்கு விவரம் தெரிஞ்சுது... பிள்ளைகளும் உதவினதால் சீக்கிரம் மீட்க முடிஞ்சது.''

''அப்பா முதல்ல புகார் சொல்ல யோசிச்சிருக்கா...''

''உங்கப்பா... மீனா, தீபால்லாம் எங்கே?''

''எல்லாரும் கூட்டமாய் இறங்க வேண்டான்னுட்டார், இன்ஸ்பெக்டர்.''

''ம்ம்... உங்கப்பா பொலிஸிலே புகாரே சொல்ல மாட்டார். அத்தனைக்குச் சக்கரபாணி அவரை பொலிஸைப் பற்றிப் பயங்காட்டி வச்சிருக்கறதாய் இங்கே கொக்கரிச்சான் முரளிதர்.''

''ம்ம்... புத்திசாலிகள்கூடச் சிறு விஷயங்களில் கோட்டை விட்டுடறாங்க. நல்ல வேளை மார்த்தாண்டத்துல நடந்த ஒரு கரத்தரங்கிலே நான் மகாதேவ் சாரைச் சந்திச்சேன். எனக்கு வாசிக்கற பழக்கமுண்டு என்பதால் எழுத்தாளரான அவரிடம் ஆர்வமாய்ப் பேசினேன்... எங்க மனைவிகளும் பழகிட்டாங்க. என் மகனுக்குக் கல்லூரியிலே இடம் வேணும்ங்கறதைத் தெரிஞ்சுகிட்டுத் தானாய் உதவினார். அதுக்கு போன் மூலம் நன்றி சொன்னேன்... அவர் வீட்டுக்கு இதுவரை நேரில் போக முடியாததும் நல்லதுக்குத்தான் - ஆக சக்கரபாணிக்கு ஒரு பொலிஸ் நண்பன் இருப்பது தெரியாமல் போச்சு.''

''அதெல்லாம் கடவுள் அருள்.''

''ஆமாம் ஸார்... மகாதேவ் சாருக்குத் தன் வீட்டிலே இத்தனை நடந்திருக்குதுன்னதும் பெரிய அதிர்ச்சி... சுரங்கப் பாதையைப் பார்த்துத் திகைச்சு நின்னுட்டார். உங்க மகளும் அவ சிநேகிதிகளும் வந்த நாலு நாளிலே நிறைய விஷயங்களைத் துப்பறிஞ்சுட்டாங்களே.'



''நாங்க ஏதும் சொல்ல ஆரம்பிச்சாலே 'வாயை மூடு'ன்னுடுவார் அப்பா. நேரா நேரத்துக்குக் காபி... கால் அமுக்கி விடறதுன்னு சக்கரம் அவரைத் தாஜா பண்ணி வச்சிருந்தான்!'' - குறைப்பட்டான் சதீஷ்.

''ம்ம்.. தட்டினதும் சக்கரபாணி விஷயங்களைக் கக்க ஆரம்பிச்சதும் விக்கிச்சுப் போயிட்டார்... அவர் மனைவிக்கும் நல்ல சுகமில்லை. ஆக சக்கரபாணி சுலபமாய் விசுவாசமான வேலைக்காரனாய் முதலாளியை நெருங்கிட்டான்... பிள்ளைங்க எப்பவாவது விடுமுறைக்கு வீடு வர்றவங்கதானே?''

''ம்ம்.. இப்ப எழுதற புத்தகத்தை முடிச்சா மகாதேவுக்குப் பேரும் ஓரளவு பணமும் வரணும். உலக அதிசயங்களை ஒப்பீடு செய்து எழுதறான். மண்டை காயற வேலை...''

''ம்ம்... அந்த ஆராய்ச்சி, உழைப்புல அவர் இந்த மாதிரி மர்ம விஷயங்களைக் கவனிக்காமல் விட்டுட்டார்!''

தாங்கள் மகாதேவைச் சந்தேகப்பட்டதற்காய் நித்யா மானசீகமாய் அவரிடம் மன்னிப்புக் கோரிக் கொண்டாள்.

★ ★ ★

அனைவரும் சேர்ந்தாற்போல உணவு மேசை முன் அமர, கங்கம்மா உற்சாகமாய்ப் பரிமாறினாள்.

சுகுணா கூடச் சோர்வின்றிச் சிரித்த முகமாய் இருந்தாள்.

''இப்ப முரளிதர், சக்கரம் எங்கே? ஜெயிலிலா?'' தழைவாய் இன்ஸ்பெக்டரிடம் கேட்டவள் அவருக்கு அப்பளம் வைத்தாள்.

''வேற ஊருல ரகசியக் காவல்ல வச்சிருக்கோம்... விஷயம் ரகசியமாய் இருந்தால் அடுத்த படகு வரும் போது மொத்தக் கூட்டத்தையும் கையும் களவுமாய்...''

''படகும் கடத்தலுமாய்க் கவிழ்த்துடலாம்...''

''ரைட்.''

''அப்போ நான் மொட்டை மாடியிலே நின்னு விளக்கு சமிக்கை செய்றேன் சார்...'' அனுமதி கேட்டான் சதீஷ்.

''செய்... அவங்களைப் பிடிச்சாத்தான் இங்கேருந்து கொண்டு போகப்பட்ட பெண்களைப் பற்றிய தகவலும் தெரிய வரும்.''

''சக்கரபாணியை முழுக்கச் சந்தேகப்பட முடியலை ஸார். சிக்னல் தெரிந்த அன்றிரவு சக்கரம் அவன் அறையிலே படுத்திருந்ததை சதீஷ் பார்த்தான்...''

''அப்ப.. லைட் சிக்னல் செய்தது நான்னு நினைச் சுட்டீங்களாக்கும்?'' மகாதேவ் சிரிக்க, பெண்கள் சங்கட மாய் முழித்தனர்.

''அது தன் வேலைன்னு சக்கரபாணி ஒப்புக்கிட் டானே... தன் கிராமத்துல மாடி வீடே கட்டிட்டானாம்.. அந்தளவு வருமானம். படுக்கையிலே மூணு தலையணையை அடுக்கிப் போர்த்திட்டால்... உங்களை ஏமாற்றிடலாமே.''

''ஓஹோ? அப்புறம் ஏதோ மரச்சிலைகளை மண்ணில் புதைச்சதாய்...''

''ஆமாம், கோவர்த்தனம் ஸர் - நம்ப தொல்பொருள் ஆராய்ச்சியாளரை வரச் சொல்லியிருக்கோம். அந்த இடத் துல போய் ஒன்னைத் தோண்டிப் பார்த்தோம்... அது பொம்மைங்கற விவரம் தெரியாம யாராவது தோண்டி யிருந்தாங்கன்னா அதிர்ச்சியிலே மூச்சு நின்னிருக்கும்... வர்ணமெல்லாம் மக்கி, மழுங்கி, பழங்காலச் சிலை போலவே இப்ப தெரியும்... அசப்புல பார்த்தா நிஜ ஆள் போலவும் கூட.''

''இதையே சட்டத்திற்கு உள்பட்ட தொழிலாய்ச் செய்து ஏற்றுமதி செய்யலாம்.''

யோசனையாய்ச் சொன்னார் மகாதேவ்.



''ம்ம்... இந்த அமைதியான இடத்தில் அத்தனை அனர்த்தங்களையும் செய்து வந்திருக்கான் பாவி...''

''இங்க... இப்ப எங்க அமைதியும் போச்சு.''

வாடலாய்ச் சொன்னாள் சுகுணா - சதீஷின் தாய்.

''இல்லம்மா - முரளிதர் போயாச்சுன்னா இது அமைதி, அழகான இடம்தான்.''

''அதிக அமைதி கூடச் சில நேரம் சங்கடமாயிடுது.''

''ஏன் ஆன்ட்டி... உங்களிடம் மத்தள லேஸ் பின்னுற ரோஸம்மா, லில்லி பற்றி சொன்னேனே! அவங்க உதவியோடு இன்னும் சில பெண்களைச் சேர்த்து நீங்க அதை ஒரு சிறு தொழிலாவே நடத்தலாம்... அந்தக் கலை அழியாது. உங்களுக்கும் திருப்தியாய்ப் பொழுது போகும்.''

சுகுணாவின் முகத்தில் தெளிவு.

''அதானே தீபா... சூட்டிகையாய் யோசனை சொல்றி யேம்மா.''

''சூட்டிகைதான் - இந்தக் குழந்தைங்க சக்கரம் செவிடனில்லைன்னு உடனே கண்டுகிட்டதுங்களே.''

''நாங்க குழந்தைங்க இல்லை, சார்...'' சேர்ந்து ராகம் பாடினார்கள் பெண்கள்!

''ஒத்துக்கறேம்மா... கோவர்த்தனம், நம்ப வீட்டைச் சுற்றியாவது கடல் விரல்கள் மறையணும்...''

''எல்லாம் நல்லபடி நடக்கும்ப்பா...''

''எனக்குத்தான் இன்னும் நல்லதாய் ஏதும் நடக்கலை.''

அடிக் குரலில் முணுமுணுத்தாள் நித்யா.

''என்னம்மா? நீ அத்தனை துணிச்சலாய் முரளிதர் கண்ணுல மண்ணைத் தூவவும்தானே நான் தடியை எடுத்தேன் - உனக்கென்ன பரிசு வேணுமானாலும் தரலாமே.''

12039688



மற்றப் பெண்கள் கிளுகிளுவெனச் சிரிக்க,

சதீஷ் இன்ஸ்பெக்டர் காதில் விஷயத்தைச் சொன்னான்.

''இவ்வளவுதானே... ஷூட்டிங் பந்தோபஸ்து எங்க பொறுப்புதான்... ஆக இப்பவே நாம அங்கே போகலாம்... நாள் முழுக்க நீ விஜய்யோடவே நிற்கலாம் - அதற்கான ஏற்பாடு எம் பொறுப்பு... வா.''

''ஹைய்யோ... நிஜமாவா... இப்பவே... நான் ரெடி.''

ஐஸ் மழையில் நனைந்தவளாய்க் கை காலை உதறித் துள்ளினாள், நித்யா.

''அடே... விஜய் அளவுக்கு ஆடறியே அம்மணி!'' என்ற லாவண்யாவை அடிக்க வீசிய கரண்டி, குறி தப்பித் தரைக்குப் பாய்ந்தது.

எல்லாரும் சற்று அச்சத்துடன் மகாதேவைப் பார்க்க, அவர் வாய்விட்டுச் சிரித்துக் கொண்டிருந்தார்.

அங்கு மகிழ்ச்சி முழுமையாய் ஆட்சிக்கு வந்திருந்தது.